விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 016 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 20 சனிக்கிழமை (04.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பசிலுக்கு அமெரிக்காவில் பெருமளவு சொத்துக்கள்

### சி.ஐ.டியிடம் போட்டுடைத்தார் விமல்



(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் பெருமளவிலான சொத்துகள் உள்ளன. அவை தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை ஆரம்பிக்குமாக இருந்தால் மேலும் தகவல்களை வழங்கத் தயாராக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் 15

## புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படுமா?

### பிரதமர் வெளியிட்ட தகவல்

(07ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் பரவும் புதிய வைரஸ்

- அச்சத்தில் உலக நாடுகள்
- இலங்கையும் அவதானம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கையெழுத்துப் போராட்டம் பொலிஸார் இடையூறு

### கிளிநொச்சியில் சம்பவம்



15

## குடும்பங்களைச் சிதைக்காதே உயிர்களைக் காவு கொள்ளாதே

### விபத்துக்களுக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்







(கிளிநொச்சி) மதுபோதையில் சாரத்தியம் செய்யாதே. அழகிய குடும்பங்களைச் சிதைக்காதே. பெறுமதியான உயிர்களைப் பறிக்காதே என்ற கோஷங்களுடன் விபத்துக்களைக் கட்டுப்படுத்தக் கோரியும் உயிரிழந்த தாய்க்கும் சேய்க்கும் நீதி கோரியும் கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து கிருமிநாசினி கடத்தல்

### கைப்பற்றியது அதிரடிப்படை



(வேலணை)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட விவசாய கிருமிநாசினிகள் வேலணை வள்ளிக்காடு, கல்லுண்டாய் முனை கடற்கரைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரால் 15

## ரணில் - சஜித் கட்சிகள் விரைவில் சங்கமம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைப்பதற்குரிய பேச்சு அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என்று அரசியல் வட்டாரங்களில் 02

## யோஷிதவிடம் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் நேற்று இரண்டு மணிநேர விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கதிர்காமம் பகுதியில் அமைந் 15

## மியன்மார் அகதிகளை நாடு கடத்தத் திட்டம்

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு சமீபத்தில் வந்து சேர்ந்த ரோகிங்யா புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டரீதியான நடைமுறைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்ட 02

## தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை முன்னிறுத்தி தமிழ்க் கட்சிகளுடன் பேச கஜேந்திரகுமார் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோருடன் கலந்துரையாடி அந்தச் சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன் 15

## தமிழர் அபிலாஷைகள் உள்ளடக்கப்பட்டால் மாத்திரமே புதிய யாப்புக்கு ஆதரவு

### முன்னாள் எம்.பி சுமந்திரன் உறுதி



(யாழ்ப்பாணம்)

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை புதிய அரசியலமைப்பில் உள்வாங்கினால் மாத்திரமே புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான பூரண ஆதரவை வழங்க முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

இருந்து அறிய முடிகின்றது.

இரு தரப்பினரையும் இணைப்பதற்கு இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகள் தோல்வி அடைந்த நிலையில், இதுவே கடைசி முயற்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது.

பேச்சு வெற்றியளிக்கும் பட்சத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டாக களமிறங்குவதற்கும், அவ்வாறு இல்லையேல் தனிவழி செல்வதற்கும் இரு தரப்புகளும் அவதானம் செலுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கை ஐக்கிய மக்கள் சக்திக்குள் அதிகரித்துள்ளதால், அந்தக் கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலை சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, இரு தரப்பு இணைவுக்குரிய சாத்தியம் அதிகமாக உள்ளது எனவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)


## நாக அலை (2025)

முகவர் கனகலிங்கம் திலகவதி (M) யாழ்ப்பாணம்

இவ் ஆண்டின் ஆரம்பத்தில் யாழ்.மாவட்டத்தில் முதலாவது முதற்பரிசாக யாழ்.முதன்மை முகவரான கனகலிங்கம் திலகவதியூடாக ராசி அதிஷ்டம் மூலம் 02.01.2025 10 இலட்சம் பரிசு வெல்லப்பட்டுள்ளது.

நயினையில் தொடரும் அமுதசுரபி ; யாழில் தொடரும் அதிஷ்டசுரபி

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கைதடி பகுதியிலுள்ள லொத்தர் கூட்டுக்கு விரையுங்கள்.

(2916)

077 603 1723


## கண்ணீர்க் காணிக்கைகள்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி **கிருஸ்ணவேணி ராஜா** அவர்களது பாசமிகு மாமியார்

**கனகலிங்கம் புகனேஸ்வரி**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-1943)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

## கண்ணீர் சொரிகின்றோம்



**அமரர் ராஜேஸ்வரி துரைராசா**

(யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் துணைவியார்)

பெண்மைக்கு இலக்கணம் வகுத்து
கணவனை கண்கண்ட தெய்வமாக்கி
குடும்பத்தை ஒரு பல்கலைக்கழகமாக்கி
பிள்ளைகளை பல்துறை விற்பன்னர்களாக்கி
உயிரையும் மெய்யையும் உறவுகளுக்காக்கி
அயலவர்களை அன்புடன் அரவணைத்து
விருந்தினர்களை அன்புடன் எதிர்கோடலுடன்
காலப்பெருவெளியில் கண்கண்ட தெய்வமானாய்
சுயநலம் இல்லாத இதயம்
வெறுப்பினைக் காட்டாத முகம் இவற்றை
என்று தான் காண்போமோ!

(C-1940)

மீளாத் துயில் கொண்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்கு கொள்ளும்
கிருஷ்ணபிள்ளை நடராசா
கிருஷ்ணபிள்ளை செல்வராசா

## குடும்ப...

கடந்த மாதம் 25ம் திகதி கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் 2 வயது குழந்தை உயிரிழந்தது.

சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பிரஸ்தாப குழந்தையின் தாய் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்தார்.

குறித்த குழந்தையின் இறுதிக் கிரியைகள் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற நிலையில், நேற்றைய தினம் 34 வயதுடைய தாயின் இறுதிக் கிரியை இடம்பெற்றது.

இந்த நிலையில் விபத்துக்களை கட்டுப்படுத்தவும், உயிரிழந்த தாய்க்கும், சேய்க்கும் நீதி கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று கிளிநொச்சி டிப்போ சந்தியில் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பெரும் திரளான மக்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

மது போதையில் வாகனம் செலுத்துதல், அதி வேகம் உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்தி கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், பாதசாரிக் கடவைகளில் வீதி மின் விளக்குகளை அமைக்குமாறும் மக்களால் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், போக்குவரத்துப் பொலிஸாரை வீதிக் கடமைகளில் அமர்த்துமாறும், விபத்து சார் குற்றங்களுக்கு அதி உயரிய தண்டனைகளை வழங்குமாறும் மக்கள் வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுபோன்ற சம்பவங்கள் மூலம் அப்பாவி மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுவதையும் அழகான குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாவதையும் தடுக்க பொலிஸாரும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தி மேற்படி கவனயீர்ப்பில் ஈடுபட்டதுடன், ஜனாதிபதி உள்ளிட்ட பலருக்கும் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

பொலிஸ்மா அதிபருக்கான மகஜர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்த தந்திரியிடம் கையளிக்கப்பட்டது. (ந-7,100,316)


## பணிப்பெண் தேவை

நல்லூர்ப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

(45 வயதிற்குட்பட்டோர்)

(2014)

076 823 7155


## மியன்மார்...

பின்னர் இது குறித்து தீர்மானிக்கவுள்ளதாகவும்

வெளிவிவகார அமைச்சு மியன்மார் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் உள்ள ரோகிங்யா புகலிடக்கோரிக்கையாளர்களின் பெயர் விபரங்களை ஏற்கனவே மியன்மார் அரசாங்கத்திடம் கையளித்துள்ளோம்.

எனவே அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் வரை அவர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்கள் என அமைச்சர் தெரிவித்தார். (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் மாந்தை கிழக்கு பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு. **செ.விசாகன்** அவர்களின் தாயார்

**அமரர் இந்திராணி செல்வரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(506)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.09.1984 மறைவு 01.01.2025

யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் முன்னைநாள் ஆசிரியர்

**திருமதி தசிந்தா கலைச்செல்வன்**

அவர்களின் மறைவையிட்டு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-1937)

பாடசாலை நலன்புரிச் சங்கம்
யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரைநகர் படகுத்தளம் புனரமைப்பு

# இலங்கை-இந்தியா இடையே ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள காரைநகர் படகுத்தளத்தை புனரமைப்பதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகி யுள்ளது.**

இந்திய அரசாங்கத்தின் 290 மில்லியன் ரூபாய் மானிய உதவியுடன் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.


இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2024 டிசம்பர் 16 ஆம் திகதியன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் அப்போதைய இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் க்சேனுகா திரேனி செனிவிரத்ன ஆகியோரால் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இதன்படி இலங்கையின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ், காரைநகர் படகுத்தளத்தை புனரமைக்க இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம், தொழிற்சாலை, இயந்திரங்கள், உபகரணங்கள், பொருட்கள், சேவைகள் போன்றவற்றை நிறுவுதல் உள்ளிட்ட குடியுரிமைப் பணிகள் மற்றும் கொள்முதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டம் முழுமையாகச் செயற்பாட்டுக்கு வந்ததும் புனரமைக்கப்பட்ட படகுத்தளம், உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் படகுத் தளத்தைச் சுற்றியுள்ள சிறிய நிறுவனங்கள் உட்பட அந்தப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும். அத்துடன் தர மான மீன்வளப் பொருட்களின் விநியோகத்தை மேம்படுத்த உதவும் என்றும் அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது. (நி)





# விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பல்கலைக்கழக கட்டமைப்பு பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் பல்கலைக்கழக கட்டமைப்பு விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வெற்றிடமாக உள்ள சில பதவிகளுக்கு தகுதியான நபர்களை நியமிக்க அதிகாரிகள் கடுமையாகப் போராடி வருவதாகவும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ஊதியத்தில் விதிக்கப்பட்ட வரி போன்ற காரணங்களினால் ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

சில பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்க முடியவில்லை. நாங்கள் நேர்காணலை நடத்தும் போது தகுதியானவர்கள் வருவதில்லை.

ஏனெனில் அவர்களுக்கு பல்கலைக்கழக கட்டமைப்புக்கு வெளியே சிறந்த ஊதியம் வழங்கப்படுகிறது.

உதாரணமாக சில மருத்துவ பீடங்களில் பேராசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது.

கடந்த அரசாங்கம் அதிக வரி விதித்ததால் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் இளம் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

எனவே வரி விதிப்பில் திருத்தம் செய்வது பல்கலைக் கழக கட்டமைப்புக்கு விரிவுரையாளர்களை ஈர்க்கும் ஒரு நடவடிக்கையாக இருக்கும்.

நாட்டை விட்டு வெளியேறியவர்களும் அவர்களுக்குச் சாதகமான சூழலை உருவாக்கியவுடன் திரும்பி வருவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

அவர்களை ஈர்ப்பதற்கான ஒரே வழி சம்பள உயர்வு அல்ல. வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஊதிய அதிகரிப்பு நோக்கத்தை நிறைவேற்றாது. அதிக வரி விதிப்பு தகுதியுள்ளவர்கள் பல்கலைக்கழகங்களில் சேருவதையும் தடுக்கிறது.

தற்போதைய நெருக்கடிக்கு பதிலளிப்பதில் நாம் ஒட்டு மொத்த அணுகுமுறையை உருவாக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக தலதா அத்துக்கோரள நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக தலதா அத்துக்கோரள நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். (நி)



# மனோ-ஜூலிசங் சந்திப்பு



(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசனுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

இதில் இனப்பிரச்சினை தீர்வுக்கான நகர்வு, அதிகார பகிர்வு, மலையக பெருந்தோட்ட காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள், சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025



புதனை இராசிநாதனாகக் கொண்ட மிதுன இராசி அன்பர்களே! இந்த ஆண்டு அனைத்து விடயங்களிலும் இருந்த தொய்வு நிலை மாறும். உங்களின் பொருளாதார நிலை மேம்படும். பொதுநலக் காரியங்களில் ஆர்வம் அதிகரிக்கும். திருமணம் செய்திகள் உங்களை வந்தடையும். மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள்.

**பொருளாதாரம்:** பங்குச் சந்தை, முதலீடு போன்றவற்றின் மூலம் திடீர் பண வரவு உண்டாகும். ஏற்றுமதி சார்ந்த விடயங்களில் அனைத்து லாபங்களையும் பெறுவீர்கள். பணம் சார்ந்த பிரச்சினைகள் அனைத்தும் தீரும். சொத்துக்களைப் புதிதாக வாங்குவதற்கும் பழையனவற்றை புதுப்பிப்பதற்கும் வாய்ப்புகள் ஏற்படும்.

**ஆரோக்கியம்:** ஆரோக்கியத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். அதே வேளையில் கடுமையான பணிச் சுமையால் பலருக்கு சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள முடியாமல் பணிகள் கசக்கிப் பிழியக் கூடும். உடலில் அவ்வப்போது சோர்வு உண்டா

**அரசியல் துறையினர்:** அரசியல்வாதிகளுக்கு சங்கடங்கள் குறையத் தொடங்கும். எதிர்க்கட்சியினர் உங்களைப் பற்றிக் குறை சொல்வதைக் குறைத்துக் கொள்வார்கள். தொண்டர்கள் உங்கள் பெருமைகளைப் புரிந்து கொள்வார்கள். கட்சி மேலிடத்தின் ஆதரவுடன் மனதிற்கினிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். உயர்ந்தவர்களின் நட்பு கிடைக்கும். கட்சிப் பிரசாரங்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். அதேசமயம் எவரையும் குறைத்து மதிப்பிடாமல் செயலாற்றவும்.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினருக்கு திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவை உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். உதவிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள்.

**திருவாதிரை:** இந்த ஆண்டு நல்ல முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்துசேரும். வெளிநாட்டு வாய்ப்புகள் வரலாம். பூமிசம்பந்தமான துறைகளில் இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் குவியும். வீண் அலைச்சல் ஏற்படலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும். கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதிருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்தி சாதுரியம் மூலம் காரிய வெற்றி

## கடினமான காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பீர்கள்!

தடைபட்டவர்களுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் கைகூடும். குழந்தை இல்லாதோர்க்கு மழலைச் செல்வம் கிடைக்கும். தனித்து நின்று போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும். கடினமான காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்களின் உடல் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் நடையில் ஒரு மிடுக்கு உண்டாகும். உங்களின் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். சிலருக்கு நல்ல குருநாதரிடம் தீட்சை பெறும் பாக்கியமும் உண்டாகும்.

**குடும்பம்:** குடும்பத்தில் குதூகலம் நிறையும். மகிழ்ச்சி தரும் பயணங்களை மேற்கொள்வீர்கள். அதன் மூலம் வருமானமும் பெருகும். உங்கள் செயல்களை நேர்மையான பாதையில் செவ்வனே செய்து முடித்து அனைவரின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். வெளி மனிதர்களால் அவ்வப்போது சிற்சில பிரச்சினைகள் ஏற்படலாம். இருப்பினும் அனைத்து பிரச்சினைகளையும் திறம்பட சமாளிப்பீர்கள். குடும்பத்தினர் அனைத்து விடயங்களிலும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உதவியாக நடந்து கொள்வார்கள். நல்ல கும். சிறு உடல் உபாதைகள் தோன்றி மறையும்.

**பெண்:** பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். அதே சமயம் குடும்பத்தில் உங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் நடந்து கொண்டு அமைதி காப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் இந்த ஆண்டு கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றவும். சுணக்கத்திற்கும் சோம்பலுக்கும் இடம் கொடுக்காமல் பணியாற்றினால் மேலதிகாரிகளின் ஆதரவை எளிதில் பெறலாம். எப்போதும் நிதானமாகவே பேசி சக ஊழியர்களின் அன்பைப் பெறவும். உங்கள் உடல் உழைப்புக்கு மேல் இருமடங்கு வருமானத்தைக் காண்பீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் பயணங்களும் பலன் தரும்.

**வியாபாரிகள்:** வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சாதகமாக முடிவடைந்தாலும் உங்கள் செயல்களில் கூடுதல் அக்கறை காட்டவும். சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புதிய சந்தைகளைத் தேடிச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். புதிய முதலீடுகளையும் துணிந்து செய்யலாம். யான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள். சில விரயங்களும் அவ்வப்போது உண்டாகும் என்பதால் சேமிப்பு விடயங்களில் கவனமாக இருப்பது நல்லது.




**மாணவர்:** மாணவர்கள் புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். போட்டிகளில் பங்கேற்றுப் பாராட்டைப் பெறுவீர்கள். உடற் பயிற்சிகளை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பெற்றோர்களின் அறிவுரைப்படி நடந்துகொண்டு மேலும் சிறப்படையுங்கள்.

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு லாபம் அதிகரிக்கும். பணியாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் இலக்கியத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம். விற்பனைத் தொழில் செய்வோருக்கு லாபம் அதிகரிக்கும். தங்கள் தொழிலை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் புதிய உத்திகளைக் கையாண்டு தொழிலில் முன்னேறுவீர்கள்.

கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறை வேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும்.

**புனர்பூசம் 1, 2,3ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு பாராட்டுகள் கிடைக்கும். மனக் கவலை ஏற்படும். உடற்சோர்வு உண்டாகும். ஆன்மிக நாட்டமும், மன தைரியமும் உங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காண புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்கக் கூடிய சூழ்நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். சாதகமான விடயங்களைப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாகக் காணப்படுவார்கள்.

**பரிகாரம்:** சங்கடசதுர்த்தி தினங்களில் விநாயகரை வழிபடவும். முடிந்தபோதெல்லாம் ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்" துதியை பாராயணம் செய்யவும். இதனால் பல சங்கடங்கள் தவிடு பொடியாகும். அதிஷ்ட கிழமைகள்: திங்கள், புதன் . அதிர்ஷ்ட எண்கள்: 3, 5

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு உயிர்களை காவு கொண்ட

# கிளி.புளியம்பொக்கணை

# பாலத்தை பார்வையிட்ட ஆளுநர்

## மார்ச் மாதமளவில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் என உறுதியளிப்பு

(தருமபுரம்)

**கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பாலத்தினை நேற்றையதினம் வடமாகண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சென்று பார்வை யிட்டதுடன் எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.**




கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ 35 பிரதான வீதியில் பத்தாம் மைல்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலம் ஆனது 2000 ஆம் ஆண்டு புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கொரோனா பெருந்தொற்று காரணமாகவும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் இடை நடுவே கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

எந்தவித சமிக்ஞைகளோ மின்விளக்குகளோ இல்லாத காரணத்தினால் கடந்த டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 3 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் நேற்று முன்தினம் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் இவ்வீதி ஊடாக பயணிக்கும் பொழுது பழுதடைந்த பாலத்தின் உட்பகுதியில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று வடமாகாண ஆளுநர் சம்பந்தப்பட்ட பகுதிக்கு வருகை தந்து பார்வையிட்டதுடன் எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் இப்பாலத்துக்கான புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்காலிக பாதுகாப்புக்காக வீதி விளக்குகள் மற்றும் வீதி சமிக்ஞைகள் பொருத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (8-316)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கிளிநொச்சியில் கையெழுத்து போராட்டம்



(தருமபுரம்)

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி டிப்போச் சந்தியில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் நேற்றையதினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# கிளி.மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம்

## குழப்பத்தில் முடிந்த கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் விவசாயிகளுக்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருக்குமிடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குடிநீர் விநியோகத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள திட்ட முகாமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது குடிநீர் விநியோகத்திற்குரிய நீர் இரணைமடுக்குளத்தில் இருந்து பெற்றுக் கொள்வது தொடர்பில் விவசாயிகளுக்கும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருக்கும் இடையே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதுடன் குறித்த கலந்துரையாடல் குழப்பத்துடன் முடிவடைந்துள்ளது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-8-315)

# வீதி புனரமைப்பின் போது பயன்தரு மரங்கள் அழிப்பு!

## பொதுமக்கள் விசனம்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு பகுதியில் காற்றாலை மின்சாரத்திற்காக கடற்கரை வீதி புனரமைப்பு வேலை திட்டத்தின் போது பயன் தரும் மரங்கள் வேரோடு பிடுங்கி வீசப்பட்டு மண் வீதியில் போடப்பட்டமையினால் நேற்று முன்தினம் மதியம் குறித்த பகுதியில் பொதுமக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டுள்ள நிலையில் கடற்கரை மணல் திட்டுகள் ஜே.சி.பி. இயந்திரத்தினால் அகழப்பட்டு வீதிக்கு அருகில் போடப்பட்டுள்ளமையினால் கிராமத்தவர்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் காற்றாலை மின்சாரம் அமைப்பதற்கான வேலைத் திட்டம் தொடர்பாகவே குறித்த வீதி புனரமைக்கப்படுவது குறித்தும் மக்கள் இதன் போது விசனம் தெரிவித்துள்ளனர்.

தாழ்வுபாடு கடற்கரையில் அமைந்துள்ள மணல் திட்டுகளில் மணல்கள் எடுக்கப்பட்டு வீதியின் அருகில் போடப்பட்டுள்ளமை தொடர்பில் கிராமத்தின் முக்கியஸ்தர்கள் மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் பிரஜைகள் குழு மற்றும் அருட்தந்தையர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப்பினால் உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து குறித்த வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. (8-285)

# வீதியை புனரமைத்து தருமாறு முட்கொம்பனில் கவனயீர்ப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் தமது பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு. கோரியும் பிரதேச பொது அமைப்புக்களால் நேற்றைய தினம் பகல் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முட்கொம்பன், அரசபுரம், செக்காலை, நேரடம்பன் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுமார் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான போக்குவரத்து வசதியின்மை மற்றும் குறித்த கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றைக் கண்டித்து நேற்று கிளிநாச்சி பூநகரி பரந்தன் பிரதான வீதியை மறித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


போராட்டத்தின் போது சம்பவ இடத்துக்கு சென்று பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போராட்டக்காரர்களோடு கலந்துரையாடியதையடுத்து அடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டதுடன் தங்களுடைய கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் பூநகரி பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர்

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கான மகஜர் பூநகரி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளரிடம் பொது அமைப்புகளால் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய அனுமதிப் பத்திரமின்றி சுண்ணக்கல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி

## வழிமறித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த இளங்குமரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை சீமெந்து உற்பத்தி தொழிற்சாலைக்கு சுண்ணக்கற்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தியை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறித்த பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பாரவூர்தியை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவிக்கையில்,

அண்மைய நாட்களில் தென்மராட்சி மந்துவில் பிரதேசத்தில் இருந்து உரிய அனுமதி இன்றி பாரவூர்தியில் சுண்ணக்கற்களை அகழ்ந்து செல்வதாக பிரதேச மக்களால் எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் யாழில் இருந்து திருகோணமலை நோக்கி சுண்ணக்கற்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று நுணாவில் பகுதியில் வைத்து எம்மால் மறிக்கப்பட்டது.

இதன்போதான சோதனையின் போது உரிய அனுமதிப்பத்திரம் இன்றி கற்கள் எற்றிச் சென்றமை கண்டறிப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாரவூர்தியை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-30)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1500 | 1500 | 1000 | 1400 |
| தக்காளி | 400 | 500 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 200 |
| கோவா | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 380 | 250 | 400 |
| பூசணி | 150 | 200 | 200 | 250 |
| புடோல் | 240 | 250 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 220 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 1000 | 800 |
| வெண்டைக்காய் | 150 | 250 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 600 | 350 | 200 | 300 |
| லீக்ஸ் | 450 | 380 | 280 | 400 |
| பீற்றூட் | 350 | 450 | 400 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 280 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 140 | 70 | 200 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 500 | 600 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 700 | 600 | 600 |
| முள்ளங்கி | 220 | 200 | 400 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 240 |

# தில்லைக்கூத்தன் திருக்காட்சியும் திருவாசகம் ஈழத்தில் சிவமுருகரால் எழுதிய ஏடும் ஐயனார் கோயிலில் வழிபட்ட காட்சியும் புகழைத்தரும் தருமத்தைக் காக்கினிற் கடவுளே வணக்கம்

## 04.01.2025 இன்று திருவெம்பாவை ஆரம்பம்

**ஆரணச்சுருதி ஓர் சார் ஆடலூர்த்தினென் றேத்துங்**
**காரணக் கடவுள் ஓலம் கடல் நிறத் தெந்தாய் ஓலம்**
**பூரைணக் கிறைவா ஓலம் புட்கலைக் கணவா ஓலம்**
**வாரணத் திறை மேற்கொண்டு வரும் பிரான் ஓலம் என்றான்**

குளக்கோட்ட மன்னன் அரசு விழாவில் எழுநிலைக் கோபுரங்களைக் கொண்ட கோயிலை 1518 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தைச்செய்து திருவிழா மற்றும் உரிய புராணங்களை வாசித்தும் 25 வருட காலம் கோயிற் பரிபாலனத்தை செவ்விதாக நடத்தினார்கள்.

போர்த்துக்கேயர் கோயிலை இடிக்க வந்தவர்களுக்கு தாயைப் போன்ற பெருங்கருணை உடைய ஐயனாரே நீதி நெறிபடாத ஒல்லாந்தரைத் தண்டித்து இறைவன் மறக் கருணை என அவ்வூர் முதியவர்கள் ஐயனாரின் புதுமையென்று பழங்கதைகளாகப் பாராட்டிப் பேசுவார்கள்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கள் மீளவும் வந்து அழிப்பர் என்று துன்பங்கொண்ட பூசகர் ஐயனார் முதலிய தெய்வங்களை மறைவிலிருந்து பூசை செய்து வர ஐயனாரது காவல் நீங்கிப் போனதினால் ஒல்லாந்தர் சைவர்களுக்கு துன்பம்பெருகும் வண்ணம் ஆலயத்தையும் இடித்து அழித்தார்.

திருவுருவங்களை நிலவறையில் மறைவாக வைத்து அந்தணர்கள் பூசை செய்வதை ஒல்லாந்து அரசு அறிய அதனை அறிந்த அவ்வூரில் பொருந்தி வாழ்ந்த உண்மைத் தொண்டர் ஒருவர் எழுந்து திண்ணபுரத்தில் உயர்ந்த அரச மரத்திற்கு தென் பக்கத்தில் பரந்த ஓர் பள்ளத்திலே மறைத்தார். நாளடைவில் அது பள்ளம் நிரம்ப மேவியது.

இவ்வாறு மகாமன்னனால் கட்டப்பட்ட எழுநிலைக் கோபுரங்களோடு கூடிய திருக்கோயிலை விட்டு நீங்கித், திண்ணபுரத்தில் அரச மரத்தின் கீழே இந்தியாவில் இருந்து வந்தவர் வைரவர் சூலத்துடன் ஒரு சிறு குடிசையில் பூசை செய்து வந்த வணக்கத்துக்குரிய ஆண்டி முனிவருக்கு திருவருள் காட்ட கண்டெடுத்து வையிரவர் அருகில் திண்ணபுரத்தில் உயர்ந்து வளர்ந்த அரச மரத்தின் கீழே ஆண்டி முனிவருக்கு அருள் செய்து அவர் கட்டிய சிறுகுடிலில் எழுந்தருளி வீற்றிருந்த ஐயனாரது திருவுள்ளக் கருத்தையாவர் அறிவார்.

**அப்பெருமானது அருளின் மூழ்கித் திளைத்த அடியார்களுக்கே அதன் உள்ளம் "பூரண புட்கலை ஐயனாரே"**

குளக்கோட்டு மன்னன் முத்துமாணிக்கச் செட்டியார், மாங்களேசுவரக்குருக்கள் சில காலந்திருவருள் பாலித்த பின்னர் புண்ணியமாகிய திண்ணபுரத்திலே கோயில் கொண்டு ஆண்டி முனிவர் அம்பலவி முருகா முதலிய மற்றும் அடியார்களையும் ஆட்கொண்ட ஐயனாருக்கு கோயில் கட்டி வழிபடும் புண்ணிய பயன்.

அதன்பின் ஐயனாரது திருவருளைப் பெற்று முத்திபெற்ற ஆண்டி முனிவர் அவர்களது உள்ளத்தில் குடிபுகுந்த அம்பலவி முருகர் ஐயனாருக்கு அருள்மிகு கோயில் அமைக்க தொண்டர்கள் கட்டுவதற்கு வேண்டிய மரம், கல், மண் முதலிய பொருட்களை அன்புடன் கொண்டு வந்து கொடுத்து இறைவனது திருவருளையும் பெற்று விண்ணுலகத்தையே பெற நினைத்தாலும் நினைத்தவாறு பெறுவர் அன்புடன் தூய்மையானவர்கள்.

**சிவமுருகர் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தரம் ஆகிய இருநாள்களும் சிறந்த தினமாகக் கொண் டாடுவது போல் இங்கும் திருவிழாவைக் செய்தும் வழிபட்டனர் ஊர்மக்களுடன்.**

**சிவமுருகரால் எழுதப்பட்ட திருவாசக ஏடு முதலில் ஐயனார் கோயிலில் வைத்துப் பூசிக்கப்பட்டது.**

ஐயனாரில் ஆனி உத்தரத் திருவிழா சிவன் ஆலயம் கட்டப்பட்ட பின்னர் பங்குனி உத்தரத்திலும், சிவமுருகர் எழுதிய திருவாசக ஏடு சிவன் கோவிலில் வைத்துப் பூசிக்கப்பட்டதாகும்.


வைரவர் சூலம், ஐயனார் என்பன ஆலயத் தெற்குப் பக்க மாபெரும் அரச மரத்தின் கீழ் ஆண்டி முனிவரும் அம்பலவி முருகரும் ஊர் மக்களும் 1810 வரையில் ஓர் கொட்டில் அமைத்து பூசை வழிபாடுகள் செய்தனர். ஆண்டி முனிவர் சமாதியாகிய பின் அம்பலவி முருகரும் (சிவமுருகர்) 1825 ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. சிவமுருகர் ஐயனாரது திருக்கோளப் பொலிவைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

**பூரண புட்கலை ஐயனாருக்கு கோயில்**
**அமைத்த ஆண்டி முனிவரையும்**
**அம்பலவி முருகரையும் அவர்களது**
**சிவனடியார்களையும் சிவனெனப்**
**பணிவோம் வணங்குவோம்**

**ஆரிய போற்றி போற்றி**
**யரிகர குமார போற்றி**
**காரியே போற்றி போற்றி**
**காவல போற்றி போற்றி**
**பூரணை கேள்வா போற்றி**
**புறத்தவ போற்றி போற்றி**
**சீர்தரு மறத்தைக் காக்குந்**
**தெய்வமே போற்றி போற்றி**

அருச்சிகத்தவரே வணக்கம் வணக்கம், அரிகர புத்திரரே வணக்கம், கரிய நிறமுடையவரே வணக்கம் வணக்கம், காவற்கடவுளே வணக்கம் வணக்கம், பூரணைக்கு நாயகரே வணக்கம், நகர் புறத்தைக் காத்து நிற்பவரே வணக்கம் வணக்கம், புகழைத் தரும் தருமத்தைக் காத்தளித்த கடவுளே வணக்கம் வணக்கம்.

**மனிதனுக்குப் தீராப் பிணியும் பிறவிப் பிணியும் பசிப் பிணியும் ஆகும். பிறவிப் பிணி தீர, நீங்க ஐயனாரை வணங்கு வோம் பசிப்பிணி தீர மாணிக்கவாசகர் மடாலயத்தை வணங்குவோம்.**



க.கு.க.சிவபாலன்
போசகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை ரத்து செய்யப்படுமா?

## பிரதமர் வெளியிட்ட தகவல்



(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் இரத்து செய்யப்பட வேண்டுமானால், பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை மூட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அலரி மாளிகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மாகாண கல்வித் தலைவர்களைச் சந்தித்து நாட்டின் எதிர்கால கல்வித் திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில், ஐந்தாம் தர புலமைப்பரிசிலை இரத்து செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அது பிள்ளைகளுக்கு மன உளைச்சல் என்கிறார்கள்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் இரத்து செய்யப்பட வேண்டுமானால், பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை மூட வேண்டும்.

பிரச்சினைக்கு தீர்வை வழங்காமல் சட்ட ரீதியாகவோ அல்லது கொள்கை ரீதியாகவோ மட்டும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டால் நாட்டில் நெருக்கடிகள் ஏற்படலாம்.

இவ்வாறான நிலைமைகளைக் குறைக்கும் வகையில் பொதுப் பரீட்சை முறையின் கீழ் பரீட்சையை எதிர்கொள்ளும் பிள்ளைகளுக்கு பொதுவான கல்வி முறை இருக்க வேண்டும்.

முடிவெடுக்கும் பொறிமுறையை வலுப்படுத்த முயற்சிக்கிறோம்.

இது அரசியல்வாதியோ, அமைச்சரோ அல்லது செயலாளரோ தனிப்பட்ட முடிவுகளை எடுப்பதற்காக அல்ல, தரவுகளின் அடிப்படையில் முடிவெடுக்கும் பொறிமுறையை அமைக்க முயற்சிக்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி)



கிளிநொச்சி கணேசபுரம் சனசமூக நிலையத்தின் பசுமைச் சூழலை உருவாக்கலும் மாணவர்களின் கற்றலுக்கான ஊக்குவிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை கணேசபுரம் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-தேவானந்தன்)

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான எளியமுறை யோகா பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்ப பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் ஜி.நாகராஜன் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 076 857 1395, 021 222 2772. (நி)

## பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல்

(தருமபரம்)

வடமாகாண ஆளுநரின் எண்ணக்கருவுக்கமைவாக 2025 ஆம் ஆண்டு அபிவிருத்தி திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து அபிவிருத்தி தேவைப்பாடுகளுள்ள ஒரு கிராம சேவகர் பிரிவினை மாதிரிக் கிராமமாக தெரிவு செய்து குறித்த கிராமத்தினை அனைத்து விடயங்களிலும் முன்மாதிரியான ஒரு கிராமமாக முன்னேற்றும் செயற்றிட்டம் ஒன்றினை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவினை மாதிரிக் கிராமமாக தெரிவுசெய்துள்ள நிலையில், குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலைமையில், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் பங்கேற்புடன் காலை 9 மணிக்கு பிரமந்தனாறு கிராம அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது குறித்த கிராமத்தின் தேவைப்பாடுகளாக கல்வி, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, விவசாயம், கழிவு வாய்க்கால், சுகாதாரம், குடிநீர், மைதான அபிவிருத்தி, உற்பத்திகளை சந்தைப்படுத்தல், சட்டவிரோத செயற்பாடுகள், வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரும் பதில் திட்டமிடல் பணிப்பாளருமான எஸ்.மோகனபவன், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மத்திய மற்றும் மாகாண ஆளுகைக்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-316)

## முழுமதி அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகைக் கலைப்பீட நடனத்துறை மாணவர்களின் முழுமதி அரங்கு நிகழ்வானது நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

நடனத்துறை மாணவன் கண்ணன் சதுர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை வருகை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஸ்ரீ.வாமதேவன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை வருகை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி. சாந்தினி சிவநேசன், யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை மேனாள் தலைவர் கலாநிதி திருமதி கிருசாந்தி ரவீந்திரா, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் கலாபூசணம் திருமதி யசோதரா விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (ஜ)

## ரயில் தாமதங்களுக்கு எஞ்சின் பற்றாக்குறையே காரணம்

### ரயில்வே திணைக்களம் தகவல்

(கொழும்பு)

ரயில் சேவையில் ஏற்படும் தாமதங்களுக்கு ரயில் எஞ்சின் பற்றாக்குறையே காரணமாக அமைந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது 15 முதல் 20 வரையான எஞ்சின்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக ரயில்வே பொதுமுகாமையாளர் என்.கே.இதிபொலகே தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட நேர அட்டவணைக்கமைய ரயில் சேவையை முன்னெடுப்பதற்கு சுமார் 48 எஞ்சின்கள் தேவைப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட எஞ்சின்களை மீண்டும் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான காலதாமதமும் ரயில் சேவையில் தாக்கம் செலுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/புலோலி மெ.மி.த.க பாடசாலையில் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (8)

## இரத்தான முகாம்

(சண்டிலிப்பாய்)



யாழ்ப்பாணம் பட்டுக் கோட்டைப் பத் ஜாங் கிரா அறக் கட்டளையினரால் அமரர் ஜெயேந்திர நினைவு தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் நடத்தப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை பத் ஜங்கிரா சக்தி பீடம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (நி-110)

## ஸ்ரீரமணரிஷிகளின் ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீரமணரிஷிகளின் 145 ஆவது ஜெயந்தி தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பூஜைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தெற்கு கலிபோர்னியாவில் விமான விபத்து

### இருவர் உயிரிழப்பு, 18 பேர் காயம்



(வோஷிங்டன்)

தெற்கு கலிபோர்னியாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வணிக கட்டடத்தின் மேற்கூரையில் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர் மற்றும் 18 பேர் காயமடைந்ததாக அமெரிக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தினை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொலிஸார் தீயை கட்டுப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்தனர். விபத்தினை அடுத்து காயமடைந்த 10 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எட்டு பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரம், விபத்தில் இருவர் உயிரிழந்ததாக புல்லர்டன் நகர பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் விமானத்தில் இருந்தார்களா அல்லது தரையில் இருந்தார்களா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

நான்கு இருக்கைகள், ஒற்றை எஞ்சின் கொண்ட விமானம் புறப்பட்ட ஒரு நிமிடத்தில் விபத்துக்குள்ளானதை விமானக் கண்காணிப்பு இணையதளமான ஃப்ளைட் அவேர் குறிப்பிட்டது.

புல்லர்டன் லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து தென்கிழக்கே 40 கி.மீ தொலைவில் சுமார் 140,000 மக்கள் வசிக்கும் நகரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## படகுகள் மூழ்கியதில் 27 பேர் உயிரிழப்பு

### துனிசியாவில் துயரம்



(துனிசியா)

மத்திய தரைக்கடலை கடக்க முயற்சித்த இரு படகுகள் கடலில் மூழ்கிய தில் 27 ஆபிரிக்க குடியேற்றவாசிகளின் உடல்களை துனிசியாவின் கடலோர காவற்படையினர் மீட்டுள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

ஆபிரிக்க புலம்பெயர்ந்தோர் அடிக்கடி பயன்படுத்தும் புறப்படும் இடமான துனிசியாவின் ஸ்ஃபாக்ஸ் நகருக்கு அப்பால் படகுகள் நீரில் மூழ்கியுள்ளன.

எனினும் இரண்டு படகுகளில் பயணித்த 87 பேரை கடலோர காவற்படையினர் காப்பாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முன்னெப்போதும் இல்லாத இடப்பெயர்வு நெருக்கடியால் துனிசியா பாதிக்கப்பட்டுள்ளது.

துனிசியர்கள் மற்றும் ஐரோப்பாவில் வாழ விரும்பும் மக்களுக்கு இது இப்போது முக்கிய புறப்படும் இடமாக ஸ்ஃபாக்ஸ் மாறியுள்ளது.

கடந்த மாதம் துனிசியாவின் கடலோரக் காவற்படை இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் சுமார் 30 புலம்பெயர்ந்தோரின் உடல்களை மீட்டெடுத்தது. அவர்கள் ஐரோப்பாவை நோக்கிப் படகுகளில் பயணித்தவர்கள் ஆவர். (நி)

## சீனாவில் வேகமாகப் ப

## மருத்துவமனைகளில் கு

## அச்சத்தில் உல

(பீஜிங்)

**கொவிட் -19 வைரஸின் பின் சுமார் 5 வருடா பிறகு சீனாவில் பல வைரஸ்கள் பரவி வருவத நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**



Human metapneumo virus எனப்படும் ஒரு வைரஸ் நிலை பரவலாக இருப்பதாகவும் அவர்களில் கொவிட்-19 தொற்றுக் குள்ளானவர்களும் இருப்ப

## டில்லியில் விமான, ரயில் சேவைகளை சீர்குலைத்த பனிமூட்டம்

(டில்லி)

கடும்பனி காரணமாக டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் குறைந்தது 60 புறப்படும் விமானங்கள் தாமதமாகிவிட்டதாகவும் ஆறு விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 193 விமானங்களின் வருகை தாமதமானதுடன் நான்கு விமானங்களின் வருகை இரத்து செய்யப்பட்டுள்ளன.

கொல்கத்தா விமான நிலையத்தில், புறப்படும் 17 விமானங்கள் தாமதமானது, ஒன்று இரத்து செய்யப்பட்டது மற்றும் 36 வரும் விமானங்களும் தாமதமாகின.



நேற்று வெள்ளிக்கிழமை காலை டில்லி விமான நிலையத்தில் ஓடுபாதைத் தெரிவுநிலை பூஜ்ஜியமாக இருந்தது, மேலும் விமான நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடும் என்று விமான நிலைய அதிகாரிகள் எச்சரித்தனர்.

அதேநேரம், பனிமூட்டம் காரணமாக நீண்ட தூர சேவைகள் உட்பட குறைந்தது 24 ரயில்கள் தாமதமாக இயக்கப்படுவதாக இந்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

இதேவேளை பனிமூட்ட நிலைமையால் பஞ்சாப் மாநிலம் பதிண்டாவில் தனியார் பேருந்து ஒன்று, ட்ரக்குடன் மோதி விபத்துக்குள்ளானது.


இதில் 20 முதல் 25 பயணிகள் காயம் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவும் புதிய வைரஸ் குவியும் நோயாளிகள்!

## லக நாடுகள்

ருடங்களுக்குப்
நவதாக வெளி



தாகவும் வெளி நாட்டு ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.


மேலும் சீனாவில் வைரஸின் தாக்கம் வேகமாகப் பரவி வருவதாகவும் சமூக ஊடகங்கள் மூலம் சீனாவின்தற்போதைய நிலைமை குறித்து யோசனையைப் பெறமுடியும் என்றும் வெளி நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வைரஸ் பாதிப்புக் காரணமாக மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நிலவரத்தை கருத்திற்கொண்டு சீனாவில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும், இது தொடர்பில் இதுவரை அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த வைரஸ் பரவல் நிலை குறித்து சீன அதிகாரிகள் இதுவரை எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. (ஙி)

# சிலி நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் பீதி



(சாண்டியாகோ)

சிலி நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

தென் அமெரிக்காவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது சிலி நாடு. இந்த நாட்டில் திடீரென சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இந் நிலநடுக்கம் 6.1 ஆக பதிவாகி உள்ளது.

சிலியில் நிலநடுக்கம் பதிவாகி இருப்பதை ஐரோப்பிய கண்டத்தின் நிலநடுக்கவியல் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

நிலநடுக்கத்தின் போது ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டதா, உயிரிழப்புகள் உள்ளதா என்பது பற்றிய எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை.

நிலநடுக்கம் உணரப்பட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.டி.வி., கமராக்களில் கட்டடங்கள் குலுங்கும் வீடியோ காட்சிகள் பதிவாகி இணையத்தில் வெளியாகி இருக்கின்றன.

கிட்டத்தட்ட ஒரு நிமிடத்துக்கும் அதிகமாகப் பதிவான அந்த வீடியோவில் கட்டடங்கள், வீடுகள், சாலையோர மின்கம்பங்கள் அதிரும் காட்சிகள் பதிவாகி உள்ளன. (ஙி)

# தென்கொரிய ஜனாதிபதியை கைது செய்ய முயற்சி



(சியோல்)

தென்கொரியாவின் அரசியல் குற்றப்பிரேரணை நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி யூன் சிக் இயோலை கைதுசெய்வதற்காக தென்கொரிய பொலிஸார் அவரது இல்லத்திற்கு சென்றுள்ளனர்.

20இற்கும் மேற்பட்ட பொலிஸார் அவரது இல்லத்திற்குள் சென்றுள்ளனர்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அவரை கைதுசெய்வதை தடுத்ததால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது.

நீதிமன்றம் அனுமதி வழங்கிய பிடியாணை சட்டபூர்வமற்றது எனத் தெரிவிக்கும் ஜனாதிபதியின் சட்டத்தரணிகள் அதனை சவாலிற்குட்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளனர். (ஙி)

# தென்கொரியக் கட்டடத்தில் பாரிய தீப்பரவல்

## புகை மண்டலமான எட்டு மாடிக் கட்டடம்



(சியோல்)

தென்கொரியாவின் சியோங்னம் நகரில் வர்த்தக நிறுவனங்கள் காணப்படும் கட்டடமொன்றில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் பலர் அதற்குள் சிக்குண்டுள்ளனர் எனவும் தென்கொரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எட்டுமாடிக் கட்டடம் முற்றாக தீயில் சிக்குண்டுள்ளதையும் கரும்புகை மண்டலத்தையும் காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (ஙி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாக இலங்கை வங்கி

இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமான இலங்கை வங்கி ஐக்கிய இராச்சியத்தின் 'பைனான்சியல் ரைம்ஸ்' குழுமத்தின் முக்கிய வெளியீடான 'த பாங்கர்' சஞ்சிகையின் "2024ஆம் ஆண்டின் இலங்கையின் சிறந்த வங்கி" என்ற மதிப்புமிக்க கௌரவத்தைப் பெற்றுள்ளது. 2021 மற்றும் 2023ஆண்டுகளைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டிலும் இவ்விருதைப் பெற்றிருப்பது வங்கியின் தொடர்ச்சியான வங்கிச்சேவையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த வகையில் 2024 இன் உலகின் சிறந்த 1000 வங்கிகள் பட்டியலில் இடம்பிடித்த ஒரே இலங்கை வங்கி என்ற பெருமையையும் இலங்கை வங்கி பெற்றுள்ளது.

'த பாங்கர்' சஞ்சிகையின் கடுமையான மதிப்பீட்டுச் செயன்முறையின் பின்னரே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதானது உறுதியான ஐந்தொகையைப் பராமரித்து, சேவைத் தரத்தை மேம்படுத்தி, தொழில்நுட்பத்தில் முதலீடு செய்து, உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வங்கியின் ஏறுமுகத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான இவ்விருது தேர்வில் 127 நாடுகள் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய பொருளாதாரச் சவால்களையும் உள்நாட்டு நிதி நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இலங்கை வங்கி இச்சாதனையை நிகழ்த்தியுள்ளது. வங்கியின் மூலோபாய முயற்சிகள் மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவம் ஆகியவை நிலையான செயற்திறனை உறுதி செய்வதற்குப் பங்களித்துள்ளன.

இலங்கை வங்கியின் தலைவர் திரு. காவிந்த டி சொய்சா இது குறித்து தனது பார்வையைப் பகிர்ந்துகொள்கையில், "இலங்கை வங்கி 2024 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாக The Banker சஞ்சிகையால் பெயரிடப்பட்டமையானது எங்களின் நிதி வலிமை மற்றும் புதுமையான அணுகுமுறையை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த அங்கீகாரம் எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் எங்கள் பணிக்குழாமின் அயராத உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாகும். வருங்காலங்களிலும் நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்தவாறே ஆகச்சிறந்த வங்கித் தீர்வுகளை நாம் தொடர்ந்து வழங்குவோம்." என்று கூறினார்.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரசல் பொன்சேகா இதுபற்றிக் கூறியதாவது, "இந்த அங்கீகாரம் இலங்கை வங்கிக் குடும்பத்திற்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இவ்விருதை முதலில் 2021 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளிலும் வென்றிருப்பதன் மூலம் நாம் வங்கிச்சேவையில் சிறந்த தரத்தை நிலைநிறுத்தியுள்ளோம் என்பது உறுதியாகியுள்ளது. இந்த மதிப்புமிக்க சர்வதேச விருது எமது நிதி ஸ்திரத்தன்மை, முன்மாதிரியான முகாமைத்துவ நடைமுறைகள், நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை என்பவற்றில் நாம் காட்டும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்குச் சான்றாகும்.



இது எங்களுக்கு மட்டுமல்ல எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும். உலகின் சிறந்த 1000 வங்கிகள் பட்டியலில் இடம் பிடித்திருப்பது உலகளாவிய வங்கித் தரத்தை அடைவதற்கான எங்களின் நெடுநாள் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. இந்தக் குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைவதற்கு உறுதுணையாக இருந்த எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், பணிப்பாளர் சபை, அரசாங்கம் என எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."

விவசாயம், கைத்தொழில் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட முக்கிய துறைகளுக்கு ஏற்ப நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் இல்ங்கை வங்கி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கை வங்கி இளையோர் கடன் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் 10 000 இளம் தொழில் முனைவோருக்கு தொடர்ந்து ஆதரவளித்து அவர்களின் வியாபாரக் கனவுகளை நனவாக்க உதவுகிறது. மேலும் இலங்கை வங்கி பெண் தொழில்முனைவோரை 'ரன்லிய' கடன் திட்டத்தின் மூலம் வலுவூட்டுகிறது. இது பெண்கள் நிதிச் சுதந்திரத்தை அடைவதற்கும் நிலையான வியாபாரங்களை உருவாக்குவதற்கும் உதவியாக இருக்கிறது.

பின்தங்கிய கிராமங்களுக்கான 'BOC Gammana' திட்டமானது கிராமவாசிகளின் நிதி அறிவை மேம்படுத்துவதிலும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது. நிதியைத் திறம்பட நிர்வகிப்பதற்குத் தேவையான அறிவினை வழங்கிக் கிராமப்புறங்களை மேம்படுத்துவதை இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

வங்கியானது அதன் பொருளாதார பங்களிப்புகளைத் தாண்டி பெருநிறுவன சமூகப் பொறுப்பிலும் (CSR) முன்னுதாரணமாகத் திகழ்கிறது. மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி கல்வித்துறையை ஆதரித்தல், சுகாதாரத்துறைசார் முன்னெடுப்புகளை ஊக்குவித்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை அதன் செயற்பாடுகளில் ஒருங்கிணைப்பதன் மூலம் பசுமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிசெய்தல் என்பனவும் வங்கியின் சமூகப் பொறுப்புக்கான சான்றுகளாகும்.

இல்ங்கையில் டிஜிற்றல் வங்கிச் சேவைகளை அறிமுகப்படுத்துவதில் இலங்கை வங்கியே முன்னணியில் உள்ளது. SmartPay, ஸ்மாட் இணைய வங்கிச் சேவை, கைபேசி வங்கிச் சேவை (B App), பற்று அட்டைகள் மற்றும் BOC Connect போன்ற டிஜிற்றல் தளங்களை உருவாக்கி வாடிக்கையாளர்களுக்கான வங்கித்தீர்வுகளில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

தீவு முழுவதும் உள்ள அதன் 2300 இற்கு மேற்பட்ட பரவலான சேவை மைய வலையமைப்பும் அதன் அதிநவீன தொழில்நுட்பங்களும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன. வங்கியானது 'பிராண்ட் ஃபைனான்ஸ் லங்கா' நிறுவனத்தால் இலங்கையின் முதற்தர வங்கி எனவும் 2024ஆம் ஆண்டுக்கான SLIM KANTAR மக்கள் விருதுகள் நிகழ்வில் இந்த ஆண்டுக்கான மக்கள் வங்கிச் சேவை வணிக நாமம் எனவும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இலண்டனிலுள்ள வங்கித் துணை நிறுவனம் உட்பட சென்னை, மாலே, ஹூலு-மாலே மற்றும் சீஷெல்ஸ் ஆகிய வெளிநாட்டுக் கிளைகளுடன் வலுவான சர்வதேச வியாபகம் கொண்ட நிறுவனமாகத் திகழும் இலங்கை வங்கியானது நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய நிதி உதவிகளை வழங்குவதி[illegible] வளத்தையும் கட்டி எழுப்புவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

# இன்று ஒரு தகவல் 295



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## கத்தியும் புத்தியும்

ஒரு திருடன் ஒரு வீட்டிலே போய் திருட வேண்டும் என்று திட்டம் போட்டான். இருட்டியதும் போய் திருட வேண்டும். ஆனால் இரவாகினால் வாசல் கதவைச் சாத்தி உட் பக்கம் தாழ்ப்பாள் போட்டுவிடுவார்களே என்ன செய்வது? எப்படி வீட்டுக்குள் போவது? இவன் யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

சரி பகல் நேரத்திலேயே யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டுக்குள்ளே நுழைந்து விடுவோம். அங்கே போய் எங்கேயாவது ஒளிந்து விடுவோம். இருட்டும் வரை பேசாமல் இருப்போம். இரவு எல்லோரும் தூங்கிய பின் அலுமாரியைத் திறந்து இருப்பது எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஓடி வந்துவிடலாம் என்று திட்டம் போட்டான்.

அதே மாதிரி ஒரு நாள் மதியத்திற்குப் பிறகு அந்த வீட்டுக்காரன் எங்கேயோ வெளியில் புறப்பட்டுப்போனான். வீட்டுக்கார அம்மா அடுப்பங்கரையில் என்னவோ சமைத்துக்கொண்டிருந்தார். திருடன் இதுதான் சரியான சமயம் என்று அந்த வீட்டினுள்ளே மெதுவாக நுழைந்து விட்டான்.

எங்கே ஒளியலாம் என்று பார்த்தான். வலது பக்கம் ஒரு ரூம் இருந்தது. உள்ளே போனான். அது படுக்கை அறை. அங்கே ஒரு பெரிய கட்டில் இருந்தது. அதற்கு அடியில் போய் ஒளிந்து கொண்டான்.இரவாகியதும் என்னுடைய வேலையை ஆரம்பிப்போம். அதுவரைக்கும் பொறுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லி போசாமல் வாயை மூடிக்கொண்டு இருந்தான்.

அதிக நேரம் கழித்து வெளியே போயிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்து சாப்பிட்டுவிட்டு விளக்கை அணைத்து விட்டு தூங்கி விட்டான்.

அந்த அம்மாவும் வேலையெல்லாம் முடித்துவிட்டு தூங்கிவிட்டார்.

நடு இரவில் விடி விளக்கு லேசாக எரிந்துகொண்டிருந்தது. வீட்டுக்காரன் லேசாக கண் முழித்தான். கட்டிலுக்கு எதிரில் ஒரு கண்ணாடி. அதிலே பார்த்தான் கட்டிலுக்கு கீழே ஒரு திருடன் ஒளிந்திருப்பது தெரிந்து போய்விட்டது.

உடனே அவன் திருடன் திருடன் என்று சத்தம் போடவில்லை. யோசித்தான். மேசையில் இருக்கும் கத்தியை கையில் எடுத்து வைத்துக்கொண்டான்.இந்த நேரத்தில் கத்தியை உபயோகப்படுத்துவதை விட புத்தியை உபயோகப்படுத்துவது தான் சாமர்த்தியம் என்று நினைத்தான். உடனே அதன்படி செயற்பட ஆரம்பித்தான்.

எதையும் வெளியிலே காட்டிக்கொள்ளாமல் மிகவும் சர்வசாதாரணமாக தன் மனைவியிடம் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி. அதனால் அவரும் வீட்டுக்காரர் கேட்ட கேள்விக்குப் பொருத்தமாகப் பதில் சொன்னார்.

இவன் கேட்டான் இதோ பார் நமக்கு குழந்தை பிறந்தால் அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்று தான் பெயர் வைக்கவேண்டும் என்றான். அதெல்லாம் முடியாது. ஆண் பிள்ளையாக இருந்தால் ஏகாம்பரம். பெண் பிள்ளையாக இருந்தால் பங்கஜவல்லி. இதுதான் உங்க மாமனார், மாமியார் பெயர். அதைத்தான் வைக்க வேண்டும் என்றார் அந்த அம்மா. அதெல்லாம் முடியாது நான் முடிவு செய்துவிட்டேன் கிருஷ்ணமூர்த்தி என்று கத்தினான் அவன்.

இல்லை ஏகாம்பரம்-பங்கஜவல்லி என்று கத்தினார் அந்த அம்மா.வாதம் முற்றிப்போய் விட்டது. கிருஷ்ணமூர்த்தி கிருஷ்ணமூர்த்தி என்று கத்தினான் அவன்.ஏகாம்பரம்-பங்கஜவல்லி, ஏகாம்பரம்-பங்கஜவல்லி, ஏகாம்பரம்-பங்கஜவல்லி என்று மனைவியும் கத்தினார். ஒரே சத்தமாகப் போய் விட்டது.

இதைக் கேட்டதும் பக்கத்து வீட்டில்-எதிர்வீட்டில் இருந்தவர்கள் எல்லாம் எழுந்து ஓடி வந்து இவர்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.இவன் சாவகாசமாக எழுந்துபோய் கதவைத் திறந்தான். இந்த இரவு வேளையில் எங்களை எதற்கு கூப்பிட்டீர்கள். யாருக்கு என்ன ஆச்சு? என்று கேட்டார்கள் பக்கத்து விட்டு கிருஷ்ணமூர்த்தியும் எதிர்வீட்டு ஏகாம்பரம், பங்கஜவல்லியும்.

அடடே உங்களைக் கூப்பிடவில்லை. குழந்தைக்கு பெயர் வைப்பது சம்பந்தமாக எங்களுக்குள்ளே சண்டை வந்துவிட்டது. அதுதான் விடயம். வேண்டும் என்றால் கட்டிலுக்கு கீழே ஒளிந்திருக்கும் திருடனைக் கேட்டுப் பாருங்கள் இவன்தான் அதற்குச் சாட்சி என்றான்.


உடனே எல்லோரும் விடயத்தைப் புரிந்து கொண்டு திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள்.நெருக்கடியான நேரங்களில் பதறாமல் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இந்தக் கதை. புத்திசாலித்தனமாகச் செயற்படும் ஒரு குடும்பத் தலைவி என்ன செய்வார் தெரியுமா?எல்லோரும் இரவானால் வீட்டை உட்பக்கமாகத் தானே பூட்டிவிட்டு தூங்குவார்கள். அந்த அம்மா வீட்டை வெளிப்பக்கமாக பூட்டுப்போட்டு பூட்டிவிடுவார். எதிர் வீட்டுக்காரரிடம் தினமும் இந்தப் பூட்டைப் பூட்டி விடச்சொல்லுவார்.

ஏன் இப்படிச் செய்கிறீர்கள். திருடன் சுலபமாக உள்ளே வந்துவிடக் கூடாது. என்பதற்காகவா என்று கேட்டார்கள். இல்லை சுலபமாக வெளியில் போய்விடக் கூடாது என்பதற்காக என்றார். என்ன சொல்கிறீர்கள் என்றேன். ஆமாம் இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு என்று வீட்டுக்காரனைக் காட்டினார்.பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்கவேண்டும் என்பதற்காக தன் வீட்டைப் பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயம் இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஈடுபாடு-பங்குபற்றல் இன்மையால் வடக்கில் பின்னடைவைக் கண்டுள்ள தமிழ்த் தேசியம்

**இக்கட்டுரை குறிப்பாக தமிழ்த்தேசிய அரசியலில் மக்களின் பங்குபற்றுதலை அல்லது ஈடுபாட்டினை அதிகரிக்கும் வகையில், அமைப்பு ரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றம் பற்றியே குறிப்பிடுகிறது. தமிழ்த் தேசியக் கட்சிகளில் இருப்பவர்களை விட, மக்கள் மத்தியில் அதிகமான தழிழ்த்தேசியப் பற்றாளர்கள் உள்ளனர் என்பதையும் வடக்கில் மாற்றம் அவசியமென்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.**




செல்வரட்ணம் சந்திரராஜா,
(முதுகலைமாணி -அரசறிவியல்)
முன்னாள் கல்விப் பணிப்பாளர்,
கல்வி அமைச்சு.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல், அதில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், தெரிவு செய்யப்படாதவர்களுக்கும் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் வடக்கு மாகாணத்தின் அனைத்து தமிழ் மக்களுக்கும் பல விடயங்களை உணர்த்தியுள்ளது. ஒவ்வொருவரும் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களின் அடிப்படையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம்.

வேட்பாளர்கள் மக்களால் ஆதரிக்கப்படும்போதும் நிராகரிக்கப்படும்போதும் அவர்களும் அவர்கள் சார்ந்த கட்சிகளும் குழுக்களும் அதற்குரிய காரணங்களை ஆய்வு செய்து அதற்கமைவாகத் தங்கள் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் வாக்காளர்கள் ஒருவரைத் தெரிவு செய்தமைக்கும் ஏதேனும் காரணம் இருக் கும். தெரிவு செய்யாமைக்கும் காரணம் இருக்கும். தெரிவு செய்யப்பட்டவர்கள் அடுத்த தேர்தலில் நிராகரிக்கப்படாதிருக்கும் வகையில் உரியவாறு செயற்பட வேண்டும். நிராகரிக்கப்பட்டவர்கள் மக்கள் தீர்ப்புக்கமைவாகத் தம்மை மாற்றிக் கொள்ள அல்லது விலகிக் கொள்ள வேண்டும். வடக்கில் முன் னுரிமை பெற்றிருந்த தழிழ்த் தேசியம் வீழ்ச்சியடையும் நிலைக்கு வந்திருப்பதற்குக் காரணம் யாது? என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என்பது தேர்தல் முடிவுகளின் வெளிப்பாடு.

"மக்கள் விருப்பத்தைப் புறக்கணித்த எந்தக் கட்சியும் நல்லா இருந்ததாகச் சரித்திரம் இல்லை". இது தெற்கில் நிரூபிக்கப்பட்டும் உள்ளது. வடக்கிலும் அவ்வாறான நிலையைத் தமிழ்த்தேசியம் அண்மித்துக் கொண்டிருக்கின்றது. **"தமிழ்த் தேசியம்" "சமஷ்டி" போன்ற சொற்களை மக்கள் இன்று வெறுப்புடன் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. இவை ஏமாற்று வார்த்தைப் பிரயோகங்கள் எனவும் தமிழ்த்தேசியவாதிகள் தமது அரசியல் இருப்புககாக மட்டும் அவ்வார்த்தைகளை உச்சரிப்பதாகவும் கருதும் நிலை மக்களிடத்தில் உருவாகியுள்ளது?.** இதனால், வடக்கில் அரசியலுக்கான மாற்று வழியைத் தேடுவதற்கு மக்கள் ஆரம்பித்து விட்டனர்.

மக்கள் எதனை விரும்புகிறார்களோ அதனைச் செயற்படுத்தத் தவறினால் அடுத்த தேர்தலில் (தெற்கு அரசியலில் நிகழ்ந்தது போல) தமிழ்த் தேசியக் கட்சி என ஒன்று வடக்கு மாகாணத்தில் இருக்காது என்பதே யதார்த்த நிலை? **தமிழ்த் தேசியக் கட்சி தாமே என ஒருவரோடொருவர் முரண்பட்டுக் கொண்டு பிரசாரம் செய்தவர்களின் புத்திசாலித்தனமற்ற செயற்பாடுகளால், புதியவர்களின் உள்வாங்கல் தமிழ்த் தேசியப் பரப்புக்கப்பால் நிகழ்ந்துள்ளதையும் விளங்கிக்கொள்வது அவசியம்.** எதுவித இலட்சியமுமற்ற, சித்றுண்ட தீர்க்கதரிசனமற்ற அரசியல் வடக்கில் ஆரம்பித்துள்ளது. பலரும் சிங்கள தேசியக் கட்சிகளுடன் இணைந்து, தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தரகர்கள் இல்லாத நேரடி அரசியலில் ஈடுபட முற்படும் நிலை தென்படுகிறது. எனவே தமிழ்த் தேசியம் வடக்கில் பின்னடைவைக் கண்டுள்ளது **என்பதை ஏற்று** தழிழ்த்தேசியவாதிகள் மக்களை இணைத்துச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை.



இதற்கமைய நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளின் மூலம் வடக்கில் மக்கள் அபிப்பிராயத்தை முறையாக நிலைப்படுத்தி மக்கள்மயப்படுத்தித் தமிழ்த் தேசியத்தின்பால் செயற்படுத்தக்கூடிய வகையில் முறையான வழிநடத்துதலில் வெற்றிடமான நிலை ஒன்று மக்களால் உணரப்பட்டுள்ளது. அரசியற் தலைமைத்துவம் என்பது அனைவரையும் ஒன்றிணைத்துக் குறித்த நோக்கத்தின்பால் இட்டுச் செல்லக்கூடிய வகையில் வழிநடத்தும் ஆற்றலைக் குறிக்குமே ஒழிய, கட்சிக்குள் உட்பூசல்கள் ஏற்படும் வகையில் செயற்பட்டுக் கட்சியைப் பிளவுபடுத்துவதல்ல. பிரிந்து சென்று கட்சிகளை உருவாக்குவதுமல்ல. இவை மக்களின் எதிர்பார்ப்புமல்ல.

சிங்கள மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களும் கொள்கைகளும் வேறு, தமிழ் மக்களின் இலக்குகளை அடைவதற்கான அரசியல் கொள்கைகளும் வழிமுறைகளும் வேறு. சிங்கள மக்கள் தங்களுக்குப் பொருத்தமான ஒரு அரசாங்கத்தைத் தற்போதைய ஜனாதிபதி தலைமையில் அமைத்துக் கொண்டனர். பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டவர்களில் பலரது திறமைகள், ஆற்றல்கள், அனுபவங்கள் பற்றித் தெரியாமலேயே மக்கள் ஜனாதிபதியின் கொள்கைக்காக வாக்களித்துள்ளனர். இது ஜனாதிபதியின் வெற்றி. ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட வெற்றி.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை இலங்கை அவர்களுக்குரிய நாடு என்ற கருத்தியலுக்கமைவாகச் செயற்படுபவர்கள். அவர்கள் அதன் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாப்பதில் மிக அவதானமாகச் செயற்படுகின்றனர். அதற்கேற்பவும் சிறந்ததொரு ஊழலற்ற ஆட்சியின் பொருட்டும் தமக்குத் தேவையான அரசாங்கத்தையும் அவர்கள் தெரிவு செய்து கொள்கின்றனர். அவர்கள் பலகட்சி ஜனநாயகத்தைப் பின்பற்றலாம். ஆனால் தமிழர்களின் நிலை இதுவல்ல. தனக்கெனத் தேசியத்தையும் பாரிய போராட்ட வரலாற்றையும்கொண்டிருப்பதோடு அதற்காகப் பெருமளவான இளைஞர்களை ஒவ்வோர் வீட்டிலிருந்தும் தியாகம் செய்த இனம். எனவே மக்களை உள்வாங்கி மக்கள் மயப்படுத்திப் பின்னடைவைச் சரிசெய்ய வேண்டியது அவசியம்.

இதனடிப்படையில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து தற்போதைய அரசாங்கத்தின் ஊடாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி தேசிய மக்கள் சக்தி அடைந்தது போன்ற ஒரு வெற்றியைத் தமிழர்களின் தீர்வு விடயத்தில் அடைய வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகளையும் அரசியல் நோக்கங்களையும் ஜனாதிபதி ஊடாக அடைவதற்கான வழி தமிழ்த்தேசியத்தின் ஒன்றிணைந்த வெற்றியாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின்போது தமிழ்த்தேசியப் பரப்பில் இது முறையாக வழிநடத்தப்படவோ அடையப்படவோ இல்லை. எதிர்காலத்தில் அதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

சில நடைமுறை மாற்றங்கள் இங்கு அவசியமானதாக உள்ளன. இவற்றைத் தமிழ்த் தேசியவாதிகள் மக்களின் வெளிப்பாடாகக் கருத்திற் செயற்படுவது பின்னடைவைத் தடுக்கும்.

**1.கட்சிகளின் ஒன்றிணைவு:**

தமிழ் விடுதலைப் புலிகளின் தலைவர் கருதியவாறு குறிக்கோளை அடையும் வரை பலகட்சி முறையிலான ஜனநாயகம் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. அரசியலுரிமைகளைப் பெறும் வரை ஒன்றிணைந்து ஒரே தமிழ்த் தேசியக் கருத்தியலின்கீழ் செயற்படத்தான் வேண்டும். **ஏற்கனவே தாபிக்கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கூறுகளாகப் பிரித்து அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கேற்பத் தனித்து இயங்குவதற்கு எவருக்கும் அதிகாரமில்லை என்பதை தமிழ் மக்கள் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படையாகவே எச்சரிக்கைத் தொனியுடன் காட்டியுள்ளனர்.** கடந்தகாலங்களிலும் கூட தீர்வொன்றைக் காண்பதற்கு இடையூறாக இருந்தது தமிழர் தரப்புக்களின் முரண்பட்ட நிலைதான் என்பது ஆழமாக ஆய்வு செய்தால் வெளிப்படும். எனவே பிரபாகரனைத்தேவை கருதி மட்டும் உச்சரிக்காமல் அனைவரும் முதலில் இதனை அடிப்படைக் கோட்பாடாகக் கொள்ள வேண்டும்.

**2. பரந்துபட்ட முறையில் வேட்பாளர் தெரிவு:**

வேட்பாளர்களுக்கானதெரிவுகள் ஒன்றிணைந்த கட்சியொன்றின்கீழ் பல்வேறு மட்டங்களிலும், வெவ்வேறு எல்லைகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலைக்குள் அல்ல. மக்கள் தமிழ்த் தேசியத்திலிருந்தும் விலகி முற்றிலும் புதியவர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து தங்கள் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ள நிலையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையிலும் மீண்டும் மீண்டும் போட்டியிடும் நிலையைத் தவிர்க்க வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டதும் மாகாண சபையில் போட்டியிடுவதும், மாகாண சபையில் போட்டியிட்டு நிராகரிக்கப்பட்டால் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதும் மக்கள் மத்தியில் வெறுத்தொதுக்கப்படுவதற்கான பிரதான காரணம் என்பதை நிராகரிக்கப்பட்டவர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். தற்போதும் கூட பாராளுமன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டவர்கள் மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகும் நிலையே காணப்படுகிறது. இது மக்களை நிச்சயமாக மாற்றுத் திட்டத்துக்குக் கொண்டு சென்று விடும்.

**3. பரம்பரை அரசியலை இல்லாதொழித்தலும் புதியவர்களை உள்வாங்வகுவதும்**

தமிழ்த்தேசிய அரசியலில், பரம்பரை அரசியல் தோற்கடிக்கப்பட வேண்டுமென்பதையும் மக்கள் இத்தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்கவும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஈடுபாடு-பங்குபற்றல்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இது மக்கள் மத்தியில் பாரிய வெறுப்பினைத் தோற்றுவித்துள்ளது என்பதை உணர வேண்டும்.

வாக்களிப்பவர்கள் வாக்களிப்பதற்காக மட்டும் தனியான அணியாகவும் இருக்கும் நிலை மக்களை தமிழ்த் தேசிய அரசியற் பங்குபற்றலிலிருந்து ஒதுக்கி விட்டுள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

**4. ஒருவர் போட்டியிடும் தடவைகளை வரையறுத்தல்:**

**தேர்தலில் போட்டியிடு வதற்கான தடவைகள் தொடர்பிலும் வரையறைகள் தேவை. அது, நிச்சயமாக ஆயுள் முழுவதுமாக இருக்க முடியாது என்பதும் தமிழ்த்தேசியம் நோக்கிய பிரதான எதிர்ப் பலையாகும்.** இலங்கையில் ஒரு ஜனாதிபதி, அவர் எந் தளவு சிறந்த தலைமைத் துவப் பண்புகளைப் பெற்றிருப்பினும் 5 வருடங்களைக் கொண்ட இரு. தடவைகள் மட்டுமே அவருக்குப் போட்டியிடும் வாய்ப்பு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. தமிழர் அரசியலில் ஒருவர் எத்தனை தடவைகள் போட்டியிடலாம் என்பதை எழுதாத விதியாக வரையறுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் ஒரு முறை போட்டியிட்டவர்களில் குறைந்தது 2/3 பங்கினராவது அடுத்த தேர்தலில் போட்டியிடாது விலகி புதியவர்களுக்கு இடமளிப்ப தன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலில் மக்களின் ஈடுபாட்டினையும் நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

**5. தமிழ்த்தேசியம் நோக்கிய இளைஞர் அணிகளை விரிவாக்குதல்:**

**2009 இன் பின்னர் வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் உட்பட மக்கள் முறையாகத் தமிழ்த் தேசியம் நோக்கி வழிப்படுத்தப்படாமை, பிரதான குறைபாடாகப் பாராளு மன்றத் தேர்தல்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.**

தமிழ் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் சிங்களத் தேசியக் கட்சிகளின்பால் அதிகமாக ஈர்க்கப்பட்டு அவற்றுக்கு வாக்களிக்கும் நிலை அதிகமாக உள்ளது. கடந்த வடக்கு மாகாண சபைக் காலத்தில் (2013-2018) 'இளைஞர் விவகாரம்' என்ற விடயம் மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்ததாக இருந்த போதிலும் அதிகமான இளைஞர்கள் சிங்களத் தேசியக் கட்சிகளின் பால் செல்வதற்கு வழிவகுத்தது மட்டுமே நடைபெற்றுள்ளது. இது 2020 பொதுத்தேர்தலில் வெளிப்பட்டிருந்தது. 2024 தேர்தலிலும் அவ்வாறான நிலை தான் காணப்படுகிறது. உண்மையில் பிரதேச மட்டங்களில் தமிழ்த் தேசியத்தை மையமாகக்கொண்ட அணிகள் ஒரு அமைப்பின் கீழ் ஓரணியில் பலப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. கட்சியை ஒன்றிணைக்கும் பணியும் தமிழ்த்தேசிய அரசியலை வலுவாக்கும் பணியும் புதியவர்களின் **ஊடாக இளைஞர்களை ஒன்றுதிரட்டுவதன் ஊடாக** ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**6. ஒன்றிணைந்த கட்சித் தலைமை சுழற்சி முறையில்:**

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து சுழற்சி அடிப்படையில் தலைமைப் பதவி வழங்கப்படலாம். கட்சியின் உயர் பீடங்களில், சுழற்சி முறையில் பழையவர்கள் விலக புதியவர்கள் சேர வழியேற்படுத்தப்பட வேண்டும். காலத்துக்கேற்ப புதியவர்களை உள்வாங்க வேண்டும். எதிர்காலத் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் வழிகாட்டும் பயிற்சி முறைகள் கட்சிக்குள் இருக்க வேண்டும். அவர்கள் எதிர்காலத் தலைமைத்துவத்துக்குத் தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவும் வேண்டும்.

**7. கட்சிக்குள் கூட்டுப் பொறுப்பினை ஏற்பது:**

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து, கூட்டுப் பொறுப்புத் தத்துவத்தை அனைவரும் பின்பற்றுதல் அவசியம். கட்சிக்குள் பெரும்பான்மைத் தீர்மானத்துக்கு அல்லது முடிவுக்கு அனைவரும் கட்டுப்படுதல் வேண்டும்.

மேற்கூறியவற்றைச் செயற்படுத்தும் பொருட்டு, வடபுலத்து **மக்கள், இளைஞர்கள், அமுக்கக்குழுவாக இணைந்து ஒன்றிணைவுக்கான கட்சி அரசியலை வழிப்படுத்த வேண்டும்.**

# சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்திற்குள் வழங்கப்படும்

## அமைச்சர் பிரசன்ன குமார தெரிவிப்பு

(கொழும்பு)

அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் குவிந்துள்ள 1,30,000 சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்குள் வழங்கப்படும் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குமார குணசேன தெரிவித்தார்.

இணையவழி முறையின் ஊடாக நிறுவனத்தில் சேவைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹெர வளாகத்தில் இடம்பெற்ற அவசர பரிசோதனை விஜயத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சீன வைரஸ் தொடர்பில் இலங்கை அவதானம்

(கொழும்பு)

சீனாவில் பரவி வருவதாக கூறப்படும் வைரஸ் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாக இலங்கை தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்களை நேற்று இடம்பெற்ற ஆய்வின் பின்னர் ஊடகங்களுக்கு வழங்கவுள்ளதாகவும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

கொவிட் -19 வைரஸ் பரவலுக்கு பிறகு சுமார் ஐந்து வருடங்களுக்குப் பிறகு, சீனாவில் பல வைரஸ்கள் பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், சீனாவில் HMPV (Human Metapneumo Virus) என்ற வைரஸால் சுவாச நோய் அங்கு வேகமாகப் பரவி வருவதோடு இது கொவிட்-19 அறிகுறிகளைப் போலவே இருக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த வைரஸானது 14 வயதுக்குட்பட்டவர்களை அதிகளவில் தாக்குவதாகக் கூறப்படுவதுடன் இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவை இந்த வைரஸின் அறிகுறிகளாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது சீனாவில் உள்ள பல வைத்தியசாலைகள் இன்ஃப்ளுவன்சா ஏ, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கொவிட் -19 நோயாளிகளால் நிரம்பியுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

04.01.2025
மார்கழி 20 , சனிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 11.25 மணிவரை
சதயம் முன்னிரவு 10.56 மணிவரை

சுபநேரம் 3.31-5.01 மணிவரை
இராகுகாலம் 9.31-11.01 மணிவரை
உதயத்தின் முன் திருவெம்பாவை ஆரம்பம்

சந்திராஷ்டமம்.
பூசம்,ஆயிலியம்.

வளவன்

**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்துசேரலாம், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.

**துலாம்**
கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம்.

**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்துசேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**
கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**
திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்**
எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் நிறைவேறலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**தனுசு**
புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்,இனத்தவர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மீனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

நெருங்கிப் பார்த்தால் ஒரு சிலரே மரியாதைக்குரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா செல்லத் தயாராகிறார் அநுர
# உன்னிப்பாக கவனிக்கிறது இந்தியா

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளவுள்ள அதிகாரபூர்வ பயணம் மற்றும் அது தொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து புதுடில்லி தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டதோ அதேபோன்று சீனாவுக்கான பயணமும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இராஜதந்திர வட்டாரத்தில் அவதானிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் பிரதான இரண்டு நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன. இந்த இரண்டு நாடுகளுடன் அமெரிக்கா உட்பட மேற்குலகத்தையும் கையாள வேண்டிய நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளார்.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இரு தரப்பையும் சமரசப்படுத்தவும் வேண்டும் என்பதால் இந்தியாவைப் போன்றே சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்த அநுர குமார திஸாநாயக்க விரும்புவதாகவும் இந்தப் பயணம் பல நன்மைகளை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கும் எனவும் அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விவகாரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் இலங்கையும் சீனாவும் கலந்துரைந்துரையாடல்களை மேற்கொள்கின்றனவா? என்பது தொடர்பில் புதுடில்லி அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இது இவ்வாறு இருக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தமது இந்தியப் பயணத்தின்போது இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விடயமும் இலங்கை மண்ணில் நடக்காது எனக் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சீன பயணத்தில் பல்வேறு ஒப்பந்தங்களில் அநுரகுமார திஸாநாயக்க கைச்சாத்திடவுள்ளார். குறிப்பாக இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து அவர் கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக மானிய அடிப்படையில் செய்து கொடுக்கும் செய்தியை சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் அனுப்பியுள்ளார். அநுரகுமார திஸாநாயக்க, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டும் என்ற செய்தியை அவர் இந்த அன்பளிப்பின் ஊடாக தெரிவிக்க விரும்புவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ந-7)

விருப்பு, வெறுப்புகளிலிருந்து விலகியிருந்து செய்யும் செயல்களின் விளைவு ஒவ்வொன்றும் பிறரது நன்மைக்காகவே இருக்கும் – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உயிரைக் காப்பது - மருத்துவர்கள் நீதியை நிலைநாட்டுவது - சட்டத்தரணிகள்

சிவப்பரம்பொருளுக்கு வைத்தியநாதன், வைத்தீஸ்வரன் என்ற நாமங்கள் உண்டு. உயிரைக் காக்க வல்லவன் என்பதால், சிவப்பரம்பொருளை அவ்விதம் அழைத்தனர்.

சிவனுக்குரிய அந்த நாமமே உயிரைக் காக்கும் வைத்தியர்களுக்குரியதாயிற்று.

ஆக, இறைவன் வைத்தியர்களின் வடிவில் தோன்றி நம் உயிரைக் காத்தருளுகின்றான் என்பது மேற்போந்த நாமம் நமக்கு உணர்த்தும் பொருளாகும்.

ஆக, மருத்துவர்கள் ஒவ்வொருவரும் உலகாளும் இறைவனுடைய பிரதிநிதிகள். தன்னுடைய பிரதிநிதிகளாக இறைவனால் ஆக்கப்பட்ட மருத்துவர்கள் எப்போதும் அன்புடையவர்களாக, மற்றவர்கள் மீது இரக்கமுடையவர்களாக, மன்னுயிரைக் காக்கின்ற மகத்தான பணியை ஆற்றுகின்றவர்களாக இருக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம்.

ஆக, வைத்தியர்கள் உயிர்களைக் காப்பாற்றுகின்ற இறைவனின் பிரதிநிதிகள் எனும்போது, இந்த மண்ணில் நீதியை நிலைநாட்டி அறத்தை வாழவைக்கின்ற பெரும் பணியை ஆற்றுகின்ற பொறுப்பை தர்மத்தின் அடையாளமாக இருக்கின்ற இறைவன் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்தான்.

ஆம் **சட்டத்தரணி, வழக்கறிஞர்** என்ற சொற்பதங்கள் சட்டத்தினூடு இத்தரணியில் நீதியை நிலைநாட்டுகின்ற கடமைப் பொறுப்பைக் கொண்டவர் என்றும் இந்த உலகத்தின் வழமையாக இருக்கக்கூடிய அறத்தை நிலைநிறுத்துபவர் என்பதனால் அவர் வழக்கறிஞர் என்றும் பொருள் தரும் வகையில் சட்டவாளர்களின் நாமங்கள் அமையப் பெற்றன.

எனினும் அண்மையில், தன் சார்பில் வழக்குப் பேசுவதாகக் கூறிய சட்டத்தரணி ஒருவர், தன்னிடம் இருந்து 44 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை கட்டணமாகப் பெற்று தன்னை ஏமாற்றிவிட்டதாக பௌத்த பிக்கு ஒருவர் கொழும்பு உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது,

பிரஸ்தாப சட்டத்தரணி வழக்காளியாகிய பௌத்த பிக்குவை ஏமாற்றியதை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் உறுதி செய்து பிரஸ்தாப சட்டத்தரணியின் பதவியை வெறுதாக்கித் தீர்ப்பு வழங்கியதுடன் 30 இலட்சம் ரூபாவை பௌத்த பிக்குவிடம் மீள ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்கியமை அனைவரும் அறிந்ததே.

இங்குதான் நீதியை நிலைநாட்டுகின்ற மிகப்பெரும் தார்மீகப் பொறுப்பை குறித்த சட்டத்தரணி உதாசீனம் செய்திருப்பது தெரிகிறது.

உண்மையில் சட்டத்தரணிகளாலேயே மக்களுக்கான நீதி கிடைக்கப் பெறவேண்டும்.

எனினும் சட்டத்தரணிகளுக்கான கட்டணம் என்பதைச் செலுத்த முடியாத சூழ்நிலையில், ஏழை மக்களுக்கு நீதி கிடைக்காமல் போகின்றது.

எனவே பொது நீதியை நிலைநாட்டும் பொருட்டு எமது சட்டத்தரணிகள் கட்டணமின்றி நீதிமன்றங்களில் தோன்றி நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு நீதியை நிலைநாட்டும்போது அதனால் ஏழை மக்கள் நன்மை பெறுவர்.

அதன்மூலம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புகின்ற அறம் இந்த மண்ணில் நிலைநாட்டப்படும்.

## துறைமுக அதிகார சபையால் காணிகள் அடாத்தாகப் பிடிப்பு

### குகதாசன் எம்.பி வெளிக்கொணர்வு

துறைமுக அதிகார சபையின் காணியை மக்கள் பிடிக்கவில்லை, மக்களின் காணிகளையே இலங்கை துறைமுக அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளது எனத் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முத்துநகர் பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருவதோடு விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். கிட்டத்தட்ட 1887 ஏக்கருக்கு மேற்பட்ட குடியிருப்பு காணியில் இவர்கள் வசித்து வருகின்றார்கள்.

இந்நிலையில் இலங்கைத் துறைமுக அதிகார சபையினர் ஒரு இரவிலேயே கல்லுப் போட்டு 5226 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே முத்துநகர் பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கான ஆதாரங்கள் உட்பட ஆவணங்களும் மக்களிடம் இருக்கின்றன.

எனவே அவர்களுடைய காணி விடுவிப்பு தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் அக்மீமன மற்றும் அதிகாரிகள் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழை மக்களின் காணிகளை அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் யுத்தத்தால் இடம்பெயர்ந்த வெல்வெரி மக்களுடைய காணிகளையும் விடுவித்து தற்போது இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்ற அந்த மக்களையும் அங்கே மீளகுடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ந-7)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய இலக்கம் 52 தலங்கமுவ சொரபொர ஜனபதய மஹியங்கனைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்குச் சென்று சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்ட போதே உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## மக்களை ஏமாற்ற முற்பட்டால் கோட்டாவின் நிலையே அநுரவுக்கு

### எச்சரிக்கிறார் மைத்திரி

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீறினால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலையே அவருக்கும் ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. அவர்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும்.

எனக்கான பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித பிரச்சினையுமில்லை.

எனது பாதுகாப்புக்கென இருப்பவர்கள் அப்பணியைச் சிறப்பாக செய்கின்றனர். நான் தற்போது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மட்டுமே. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இன்னும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை என்றார். (ந-7)

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் ஆலயக் கேணியைச் சுத்தம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த கார்த்திக் (வயது 45) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வவுனியா குடியிருப்புப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆலயத்தின் கேணியை அடியவர்கள் சுத்திகரித்துக் கொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக நீர் இறைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்ட மின்கசிவில் சிக்குண்ட குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். (ந-7.250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் - பகுதி - I

04




கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உள்ளூராட்சி மன்றமொன்றிற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் மற்றும் ஈட்டல்களை இரண்டு பிரதான பகுதிகளுள் அடக்க முடியும். அவை 1. மீண்டு வரும் வருமானம் 2.மூலதன வருமானம். இதற்கிணங்க இவ்விரண்டு பகுதிகளுள்ளும் அடங்கக் கூடிய வருமானங்களை படம்-1 காட்டுகிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கு தமது சேவைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 43 பிரதான வருமான வழிகள் காட்டப்பட்டுள்ளன. இவைபற்றி கீழே தரப்படுகிறது.

- வீதவரிகள் மற்றும் வரிகள் (Rate & Taxes)

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம்




*படம்-1* (நன்றி: ஆசிய மன்றம்)

### வருமான வகைப்படுத்தலும் அதனுடன் தொடர்பான சட்ட ஏற்பாடுகளும்

உள்ளூராட்சி மன்றங்களால் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய வருமானங்களைத் தற்போதுள்ள வருமான வகைப்படுத்தலுக்கிணங்க பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என்பதுடன் அவ்வொவ்வொரு வருமான அறவீடு மற்றும் வகைப்படுத்தலுக்குரிய சட்டஒழுங்குகள் பின்வருமாறு அமையும்.

- வீதவரிகள் மற்றும் வரிகள் (Rate & Taxes) (10 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- வாடகை (Rent) (5 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் (Trade Licence) (8 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- சேவைகளுக்கான கட்டணங்கள் (7 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- உத்தரவு ஆணை/ பற்றாணைக் (warrant) கட்டணங்கள் மற்றும் குற்றப்பணங்கள் (5 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- ஏனைய வருமானங்கள் (5 வழிகள் கூறப்பட்டுள்ளது )
- அரச நன்கொடைகளும் மீளளிப்புக்களும் (3 வழிகள் கூறப்பட்டுள்ளது )

மேற்காட்டப்பட்ட வகைப்படுதலுக்கு பல்வேறு சட்டங்களின் கீழ்

**இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் ஆதன மதிப்பீட்டு வரி மற்றும் வரி வகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ளன.**

01. ஆதன மதிப்பீட்டு வரி (Assessment Tax)

ஒரு சபையின் (மாகாண, நகர மற்றும் பிரதேச சபை) அதிகாரத்திற்குட்பட்ட எல்லையினுள் அமைந்துள்ள வீடுகள், கட்டடங்கள், காணிகள் வாடகைக்கு விடப்பட்ட பாரிய கட்டடங்கள் குத்தகைக்கு அரசாங்கச் சொத்துக்கள் உட்பட எல்லா அசையாச் சொத்துக்களும் இந்த மதிப்பீட்டு வரிக்கு உட்பட்டதாகும்.

ஒரு சபைக்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் முக்கிய வளமாக இந்த வரி அமைந்துள்ளது. உள்ளூராட்சி ஆட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் நிர்ணயிக்கப்படும் விகித்ததின் அடிப்படையில் சொத்தினுடைய வருடாந்தப் பெறுமதியில் அறவிடப்படுகின்றது. எல்லாச் சொத்துக்களும் அவைகள் காணிகளாயினும் சரி கட்டடங்களாயினும் சரி சபையின் குறித்த மதிப்பீட்டுப் பதிவில் பதியப்பட வேண்டும். இதற்கான சட்ட அதிகாரங்கள் உள்ளூராட்சிச் சபைச் சட்டங்களில் உள்ளன. தேவைக்கேற்ப துணைச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

மதிப்பீட்டு வரி சம்பந்தமான

அறிவித்தல்

சொத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் ஒரு மதிப்பீட்டு அறிவித்தல் உரிய சொத்தின் உடைய உரிமையாளர், கூட்டு உரிமையாளர் குத்தகைகாரர் அல்லது குடியிருப்பாளருக்கு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய மதிப்பீட்டு வரி பற்றி அனுப்பப்படுகின்றது. இவ்வறிவித்தல் சொத்தில் குடியிருப்பவரிடம் கையளிக்கப்படும் சொத்தின் மீது அல்லது கட்டத்தின் மீது அறிவித்தலை ஒட்டிவிடுதல் கூட அறிவித்தலை கையளித்ததற்கான ஒரு முறையாகக் கருதப்படும். மதிப்பீட்டுக் கட்டண அறிவித்தல் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் இருக்க வேண்டும். இவ்வறிவித்தலில் பல விடயங்கள் உள்ளடக்க வேண்டும்.

மதிப்பீட்டு வரிக்கட்டணம் செலுத்தப்படாதவிடத்து நடவடிக்கைகள் வரியிறுப்பாளருக்கு எதிராக பிரதேச சபையால் எடுக்க முடியும்.

### உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்பு

மாநகரசபை, நகர சபை மற்றும் பிரதேச சபை உள்ளடங்கிய உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்பு 3 சட்ட தயாரிப்புகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. அவை

- மாநகர சபை கட்டளைச் சட்டம் (1947)
- நகர சபை கட்டளைச்சட்டம் (1939)
- பிரதேச சபை சட்டம் (1987)


### உள்ளூராட்சி நிருவாகத்தில் உள்ளூராட்சி அமைச்சின் பங்கு

உள்ளூராட்சி அமைச்சு இந்நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவன மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கி வருவதுடன் மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உரிய பங்களிப்பினை செய்வதற்குத் தேவையான வழிமுறைகளையும் உருவாக்கும் முன்


**பிரதேச சபை பெறும் ஒட்டுமொத்த வருமானம் பின்வரும் 8 வருமான தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும்**

1. விகிதங்களும் வரிகளும்
2. வாடகைகள்
3. உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள்
4. சேவைக் கட்டணங்கள்
5. பற்றாணைக் கட்டணங்கள்
6. பிற வருமானம்
7. வருவாய் மானியங்கள்
8. மூலதன வருவாய்

***நன்றி- Asia Foundation***




**உள்ளூராட்சி மன்றங்கள் வரிகள் மூலம் வருமானம் தேடல்**




**உள்ளூராட்சி மன்றங்கள் வாடகை மூலம் வருமானம் தேடல்**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசிலுக்கு...

தேசிய சுதந்திர முன்னணியின் தலை வருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அமெரிக்காவில் உள்ள பசில் ராஜ பக்ஷவின் சொத்துக்கள் குறித்து கடந்த காலத்தில் விமல் வீரவன்ஸ வெளியிட்டி ருந்த கருத்துத் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று வெள்ளிக் கிழமை அவரிடம் வாக்குமூலமொன்றை பெற்றிருந்தது.

வாக்குமூலத்தை அளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்,

பசில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்கா வில் இருக்கும் சொத்துகள் தொடர்பில் நான் வெளியிட்டிருந்த கருத்துகள் குறித்து வாக்குமூலமொன்றைப் பெற வேண்டுமென குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைத்தனர். என்னிடம் உள்ள தகவல்களை அவர்களிடம் வழங்கியுள்ளேன்.

அமெரிக்காவில் எந்தவொரு பணி யும் புரியாத பசில் ராஜபக்ஷவுக்கு எவ் வாறு அங்கு பெருமளவிலான சொத் துக்கள் இருக்க முடியும். அவரது மகன் மற்றும் உறவினர்கள் சிலரது பெயரிலும் சொத்துக்கள் உள்ளன.

இந்த அரசாங்கம் உண்மையான ஊழல், மோசடியாளர்கள் குறித்து விசாரணைகள் செய்வதாக எமக்கு தெரியவில்லை. தற்போது பசில் ராஜ பக்ஷவின் சொத்துக்கள் தொடர்பில் தக வல்களை பெற்றுள்ளனர். அவர் இரட் டைக் குடியுரிமை கொண்டவர் என்ப தால் விசாரணைகளை துரிதமாக ஆரம்பிக்க முடியும். இந்த விடயத்தில் அரசாங்கம் உண்மையான விசாரணை களை ஆரம்பித்தால் எம்மிடமுள்ள மேலதிக தகவல்களையும் வழங்க முடியும்" என்றார். (ம-7)

## தமிழர்...

பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் நிறை வேற்று ஜனாதிபதி முறையை ஒழித் தல் என்பன புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்கவின் தலைமையிலான தற் போதைய அரசாங்கம் புதிய அரசிய லமைப்பை தயாரிப்பதாக உறுதியளித் துள்ள நிலையில் அதற்கான பணி களை விரைவில் ஆரம்பிப்பதாக அறி வித்துள்ளது.

எனவே புதிய அரசியலமைப்பு தயா ரிப்பதை தற்போதைய அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் அதிகள வானவற்றில் அப்போதைய மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் களும் கலந்துகொண்ட நிலையில் பொதுத் தேர்தலின் பின்னர் மூன்று சந்தர்ப்பங்களில் தான் ஜனாதிபதியை சந்தித்ததாகவும் அதன்போது புதிய அரசியலமைப்புத் தொடர்பில் கலந்து ரையாடியதாகவும் முன்னாள் எம்.பி சுமந்திரன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், புதிய அரசியல மைப்பு தொடர்பான தனது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அதற்கான பணிகளை ஆரம்பித்ததன் பின்னரே அறிவிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (ந-7)

## யோஷிதவிடம்...

துள்ள அரச காணி ஒன்றின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற் காகவே அவர் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்துக்கு அழைக்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கையெழுத்துப்...

அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்கு அருகில் நேற்று நடைபெற்ற கையெழுத்துப் போராட் டத்தை கிளிநொச்சி பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கையெழுத்து சேகரிக்கும் பணி இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் அனுமதி பெற்று குறித்த கையெழுத்து போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசி யல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப் பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடு தலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் தொடர்ச்சியாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங் களில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று கிளிநொச்சியில் குறித்த போராட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் கிளிநொச்சியில் மட் டும் இவ்வாறு பொலிஸார் இடையூறு களை ஏற்படுத்தி தடுத்து நிறுத்திய மைக்கு ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி களின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத் துக்கள் அடங்கிய மகஜர் ஜனாதிபதி யிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-7)

## முன்னிறுத்தி...

னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தல் முடிவு களை அடுத்து எதிர்வரும் காலத்தில் அரசால்புதிய அர சமைப்பு உரு வாக்க முயற்சி கள் முன்னெடுக் கப்படும்போது, குறைந்த பட்சம் அந்த விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று பட்டு செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி., வெளிப் படுத் தியிருந் தார்.

இதன்தொடர்ச் சியாக தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற குழுத்தலை வர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் ஜனநாய கத் தமிழ்த் தேசி யக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக் கலநாதன் எம்.பி. ஆகியோரைக் கடந்தமாதம் சந் தித்துக் கலந்து ரையாடியிருந் தார். இவ்வா றானதொரு பின் னணியில், தன் அடுத்தகட்ட நகர்வுகள் குறி த்து கஜேந்திர குமாரிடம் வின வியபோது, எதிர் வரும்7ஆம்திகதி பாராளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக் கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக் கலநாதன் ஆகி யோருடன் மீண் டும் கலந்துரை யாடவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதனூடாக தமிழ்த் தேசியக் கட்சி களின் பாராளுமன்ற உறுப்பினர்களு டன் அந்தத் தீர்வுத் திட்டவரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்து ரையாடவும் முடியும் என்றும் அவர் நம் பிக்கை வெளியிட்டார். (ந-7)

## இந்தியாவி...

கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகத்தின் பெயரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையிலேயே குறித்த கிருமிநாசினி கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின் சட்டநட வடிக்கைகளுக்காக கைது செய்யப் பட்டவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(ந-7,33)


மஹஜன சம்பத — திகதி 2025.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 5705 — N 1 6 3 1 1 2
அத சம்பத — N 3 1 1 2 — சீட்டிழுப்பு இலக்கம் 280
National Lotteries Board

தன நிதானய — திகதி 2025.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1735 — U 19 22 55 74 U — Double Chance 84850

மெகா பவர் — திகதி 03/01/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2053 — M 16 13 43 62 72

லக்கி 7 VIP — திகதி 2025.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 531 — D 8 9 7 0 0 0 D

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3947 — சீட்டிழுப்பு திகதி 03.01.2025 — W 10 12 23 51 — W

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1014 — மீனம் 16 28 41 61 மீனம் — 56928 — 27

உத்தியோகபூர்வ முடிவுகள் — 03.01.2025 — வெற்றி வாரம் 413 — H 3 3 6 0 9 8 — 89113 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,438,381.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2679 — சீட்டிழுப்பு திகதி 2025.01.03 — தினம் வெள்ளிக்கிழமை — 16 30 31 49 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,730,556.00 — DLB

சனிதா — திகதி 03.01.2025 — வெற்றி வாரம் 4840 — 19 48 61 71 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,617,112.40 — 64039 — DLB

சசிரி — 592 — 03.01.2025 — வெள்ளிக்கிழமை — 01 32 42 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4391 — சீட்டிழுப்பு திகதி 03.01.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 09 13 17 43 — ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,701,988.80 — 158088 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — X 29 02 10 14 19 — 1855 — 03.01.2025 — வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.560,686,787.00 — DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2505 — சீட்டிழுப்பு திகதி 2025.01.03 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,681,331.20 — 14 37 70 75 K — 210398 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(2918)

தொடர்புகளுக்கு :

**070 290 2338, 076 017 1105**

# வாடகைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் "6 ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்" அண்மையில் அமைந்துள்ள வீட்டின் வரவேற்பறையுடன் கூடிய படுக்கையறை வாடகைக்கு விடப்படும். சட்டத்தரணி, தாதிமார், அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு : **077 435 0680**

(2896)

# Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 255/= |
| 1Kg பொன்னி அரிசி | - 237/= |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= |
| 1Kg கீரி சம்பா | - 259/= |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= |
| 1Kg பயறு | - 580/= |
| 10Kg விஜிதா அரிசி | - 2710/= |
| 1Kg கடலை | - 490/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= |
| 1L Vimal தே. எண்ணெய் | - 800/= ~~860/=~~ |
| 180mL சிக் சம்போ | - 390/= ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 48/= ~~80/=~~ |




400g Anchor 990/= ~~1050/=~~

வடமராட்சி,தென்மராட்சி சில்லறைக் கடைகளுக்கு டெலிவரிகள் மற்றும் கொள்வனவுகளிற்கு 076 – 800 6500 இன் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(507)

Happy Supermarket
0777 8080 30

# கடை வாடகைக்குண்டு

31 அடி அகலம் X 42 அடி நீளம் பரப்புடைய கடை ஒன்று டச்சு வீதியில் வியாபாரத்திற்கும் களஞ்சிய அறைக்கும் (STORES) உகந்த இடம்

தொடர்புகளுக்கு :

**077 288 7740**

(C-1945)

# மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

**சீனா(China)** மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் **(Solar Lights)** வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

**விலை 7000 ரூபாவிலிருந்து**



"நாங்கள் உங்களோடு"

**ஆர்க் . என் . கம்பனி**



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

**N5 எலக்ரிக்கல்ஸ்**

- 077, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

(2909)

Hotline : 071 535 7799/ 071 554 7973

# TECHNO WORLD

## A/L தொழில்நுட்பப் பிரிவு

செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

**பொறியியல் தொழில்நுட்பம்**
**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்**

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

(C-1941)

**077 017 5346**

# V2 VISA SERVICES

## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1944)

# NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST

## கணித விஞ்ஞானப் பிரிவுகள்

**2025 Revision Classes**
**Tamil & English Medium.**

**Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

| | |
|---|---|
| PHYSICS | :- R.Kumaran. |
| | R.Kugen. |
| CHEMISTRY | :- Dias |
| | K.T.Shivakumar |
| BIOLOGY | :- N.T.Gajenthiran. |
| COM.MATHS | :- V.Khariharan |

ஆரம்பம் :- 05.01.2025 நாளை (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 09.30 am

அனுமதிகள் 02.01.2025 முதல் வழங்கப்படுகின்றன.

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

(C-1939)

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:

**021 221 6690, 077 336 4030, 075 836 4055**

# NEW SCIENCE HALL

**KANNATHIDDY ROAD JAFFNA**

## 2025 A/L DAY CLASS

**கணித, விஞ்ஞானப் பிரிவுகள்**

(2024 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

| | |
|---|---|
| **COM.MATHS** | |
| P. செந்தில்நாதன் | 7.30 - 9.30 AM |
| S. சிவகரன் | 5.00 - 7.00 PM |
| **BIOLOGY** | |
| V.S. குணசீலன் | 8.00 - 9.30 AM |
| **CHEMISTRY** | |
| V.K.நந்தா<br>P.லோகா | 9.30 - 11.30 AM |
| **PHYSICS** | |
| G.பிரபா<br>R.ராகுலன் | 12.00 - 2.00 PM |

**ஆரம்பம் : 06.01.2025** திங்கட்கிழமை
நிகழ்நிலை (Zoom) வகுப்புக்களும் நடைபெறும்.

https:// facebook.com
NEW SCIENCE HALL JAFFNA

(C-1942)

தொடர்புகட்கு : **077 791 7611, 076 566 3006, 076 569 3006**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் [illegible] யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org